Registered as a news paper.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 27 (18.05.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :229

# புலிகளின் சமாதான செயலகத்தில் மனித உரிமைக் குழு நிறுவப்படும்!

## இயன்மாட்டினிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் ஒரு அங்கமாக விடுதலைப் புலிகள் நிறுவன மயப்படுத்தப்பட்ட மனித உரிமைக் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும், இந்த மனித உரிமைக் குழு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இயங்கும் எனவும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மன்னிப்புச்சபையின் முன்னாள் தலைவர் இயன் மாட்டினிடம் தெரிவித்தார்.**

சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள் தலைவரும், இலங்கையின் சமாதான முயற்சிகளில் மனித உரிமைகள் தொடர்பான ஆலோசகராகவும் உள்ள இயன் மாட்டீன் நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது - இயன் மாட்டீன் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டறிந்தார். அத்துடன், விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் பின்னணியிலான மனித உரிமை நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசாரித்து அறிந்து கொண்டார்.

இதன்போதே - அரசியற்துறைப் பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் நிறுவனமயப்படுத்தப்பட்ட மனித உரிமை குழுவை நியமிக்கவுள்ளனர் எனவும், இது சமாதான செயலகத்தில் இயங்குமெனவும் தெரிவித்தார். அத்துடன், இவ்வாறு உருவாக்கப்பட்ட மனித உரிமைக் குழு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் ஒரு அங்கமாக இயங்கும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச்சந்திப்பின் போது - இயன் மாட்டீன் தற்போதைய சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க அரசு பெரும் பிரயத்தனம்!

### ஜாதிக ஹெல உறுமயவிடமும் தஞ்சம்

(கொழும்பு)

இன்று கூடவுள்ள நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கும், பிரதி சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிகளுக்கு இடம் பெறவிருக்கும் வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்காக, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியுடன் கொண்டிருக்கும், முரண்பாடான போக்கினால் ஐ.தே.க., ஹெல உறுமயவின் ஆதரவு கிடைக்கும் எனக் கருதியிருந்த ஜனாதிபதி சந்திரிகா இறுதி நேர முயற்சியாக அந்தக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி சபாநாயகர் தெரிவு

## கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது? இன்று காலையே முடிவாகும்!

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் பிரதி சாபாநாயகர் தெரிவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது என்று இன்று தீர்மானிக்கப்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு இன்று காலை 10.00 மணிக்கு கூடும்போது பிரதிசபாநாயகரை தெரிவுசெய்யப்படவுள்ளதாக சபாநாயகர் அறிவித்திருந்தார்.

எனினும் இந்த பிரதி சபாநாயகர் தெரிவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்சியை ஆதரிப்பது என்பது குறித்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றும் கூடி ஆராய்ந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமான அந்தக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு முகாம் அமைப்பது குறித்து புலிகளுடன் யுனிசெப் நிறுவனம் பேச்சு!

### மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது

## பழுதடைந்த உணவினை உட்கொண்ட

## மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட 18 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கான புனர்வாழ்வு முகாம்கள் அமைப்பது தொடர்பாக நேற்று மட்டக்களப்பில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப் புலிகளின் சோலையகத்தில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில் - விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் யுனிசெப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பழுதடைந்த உணவினை உட்கொண்ட 131 விமானப்படையினர் ஆஸ்பத்திரியில்!

## பலாலியில் நேற்றுமுன்தினம் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப்படைத் தளத்தில் நேற்று முன்தினம் இரவு உணவை உட்கொண்ட 131 விமானப் படையினர் திடீர் சுகவீனமுற்று பலாலி இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பலாலி விமானப்படைத் தளத்தில் பணியாற்றும் விமானப்படையினர், தமது இரவு உணவை உட்கொண்ட பின்னரே திடீர் சுகவீனமடைந்தனர்.

கோழிக்கறியுடன், இந்த உணவை உட்கொண்ட விமானப்படையினரே பாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவர்கள் உட்கொண்ட உணவு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அகாஷி கிளிநொச்சி வருகிறார்!

## பிரபாகரனை சந்திக்கவும் விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சிக்கு இன்று விஜயம் செய்து - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி -

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்கு விரும்புவதாக கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்துக்கு தகவல் அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி கொழும்பில் பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்திவருகின்றார்.

சமாதானப் பேச்சுக்களை அரசுக்கும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வாசஸ்தலம் மீது நேற்றிரவு கல்வீச்சு!

கொழும்பு கிரகரியில் அமைந்துள்ள நோர்வே வாசஸ்தலத்தின் மீது நேற்றிரவு 8.30 மணிக்கு இனந்தெரியாத குழு ஒன்று கல்வீச்சு மேற்கொண்டது.

சுமார் பத்து நிமிடமாக இந்த வாசஸ்தலத்தின் மீது கற்கள் வீசப்பட்டபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சம்பவம் நடைபெற்ற இடத்தில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்னும் ஒரு வார காலத்துக்குள் அரசு பெரும்பான்மையை நிரூபிக்கும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இன்னும் ஒரு வாரத்துக்குள் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளரான மஹிந்த சமரசிங்க - சிறுபான்மை அரசாங்கம் ஒன்று பதவியிலிருப்பதால் நாடாளுமன்ற ஆலோசனை சபை மற்றும் செயலாற்றுக்குழு என்பனவற்றின் பெருமளவு எதிர்க்கட்சி உறுப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

# தி.மு.க கூட்டணி கட்சிகள் வற்புறுத்தல்
# பொடா சட்டம் வாபஸ் பெறப்படும்?

(புதுடெல்கி)

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக கடந்த பாரதீய ஜனதா அரசால் பொடா சட்டம் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தை அரசியல் ரீதியாகப் பழி வாங்கப் பல்வேறு மாநிலங்களும் பயன்படுத்துகின்றன என்று எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பாரதீய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க, ம.தி.மு.க கட்சிகளும் பொடா சட்டத்தை திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்தின. ஆனால், பொடா மறுஆய்வுக்குழு அமைத்த பாரதீய ஜனதா, அதனை வாபஸ்பெற மறுத்து விட்டது.

இதற்கிடையே, ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளதால், பொடா சட்டம் திரும்பப் பெறப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் பக்கம் வந்துள்ள தி.மு.க, பொடா சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

தாங்கள் கொடுக்கும் ஆதரவுக்கு பிரதிபலனாக பொடா சட்டத்தை விலக்கவேண்டுமென்று தமிழகக் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. காங்கிரஸ் கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகள் பொடா சட்டத்தை தீவிரமாக எதிர்க்கின்றன.

கூட்டணி கட்சிகளின் கோரிக்கையை சோனியா ஏற்றுள்ளதாகத் தெரியவருகிறது. ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும், அவர் பொடா சட்டத்தை விலக்குவது உட்பட சில முக்கிய கோப்புக்களில் கையெழுத்திடுவார் என்று தெரிகிறது. பொடா சட்டம் திரும்பப் பெறப்படுவதன் மூலம் தி.மு.க, ம.தி.மு.க கட்சிகளின் நீண்ட நாள் முயற்சி வெற்றிபெறவுள்ளது.

# ம.தி.மு.கவின் தனித்துவம் பேணவே அமைச்சரவையில் சேரவில்லையாம்!
## வை. கோபாலசாமி கூறுகிறார்

(டெல்கி)

எங்களது தனி அடையாளத்தை பாதுகாக்கும் வகையில்தான் மத்திய அமைச்சரவையில் சேருவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ கூறியுள்ளார்.

காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் - பங்கேற்ற வை.கோ நிருபர்களிடம் பேசுகையில் -

பா.ஜ.க தலைமையிலான மத்திய அரசாங்கத்தில் பங்கேற்றதால் பல கசப்பான சம்பவங்கள் ஏற்பட்டன.

ம.தி.மு.க தனது அடையாளத்தை, தனித்துவத்தை இழக்க விரும்பவில்லை. இதனால்தான் அமைச்சரவையில் சேருவதில்லை என்ற முடிவுக்கு வந்தோம். வெளியில் இருந்து ஆதரவளித்தாலும், காங்கிரஸுக்கு பரிபூரணமான ஆதரவைத் தருவோம் என்றார்.

## நல்லூர் பிரதேசத்தில்
# வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி இரண்டு தினங்கள் ஏற்றப்படும்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி நாளையும், நாளை மறுதினமும் ஏற்றப்படவுள்ளன.

இந்த இரு தினங்களிலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்துகள் ஏற்றி நோய் ஏற்படுவதைத் தடுக்குமாறு பிரதேசசபை சுகாதார அதிகாரிகள் பிரிவு கோரியுள்ளது.

நாளை காலை 9 மணிமுதல் 12 மணி வரை நல்லூர் பிரதேசசபை உப-அலுவலகத்திலும், அன்றைய தினம் மாலை 2 மணி முதல் 3 மணிவரை - கொக்குவில் கிழக்கு காளி கோவில் பகுதியிலும்,

மறுநாள் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், அதேதினம் 10.30 மணி முதல் 12 மணிவரை ஆறுகால்மடம் பாரதி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை கொக்குவில் கிழக்கு சனசமூக நிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லட்சுமி பார்வதியின் சபதம் நிறைவேறியது
# என்.டி.ராமராவின் அஸ்தியை காவிரி சங்கமத்தில் கரைத்தார்!

(ஸ்ரீரங்கபட்டினம்)

ஆந்திரத் தேர்தலில் தோல்வியைத் தழுவியதை அடுத்து சந்திரபாபு நாயுடு அரசு பதவி விலகியது. இதன் மூலம் தனது சபதத்தை நிறைவேற்றிய லட்சுமி பார்வதி, கணவர் என்.டி.ராமராவின் அஸ்தியை காவிரி சங்கமத்தில் கரைத்தார்.

ஆந்திர முன்னாள் முதலமைச்சர் என்.டி.ராமராவ் கடந்த 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி மரணமடைந்தார். அவருடைய மனைவி லட்சுமி பார்வதி கணவரின் சமாதி முன்பு அப்போது ஒரு சபதம் எடுத்துக்கொண்டார்.

என்.டி.ராமராவின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு பதவிக்கு வந்த சந்திரபாபு நாயுடுவின் (என்.டி.ராமராவின் மருமகன்) ஆட்சி என்று கவிழ்கிறதோ அதன் பிறகுதான் கணவரின் அஸ்தியைக் கரைப்பேன் என்பதே லட்சுமி பார்வதியின் சபதமாகும்.

இந்தத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த தெலுங்கு தேசக் கட்சி ஆட்சியைக் காங்கிரசிடம் பறிகொடுத்தது. சந்திரபாபு நாயுடு பதவி விலகியதைத் தொடர்ந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு லட்சுமி பார்வதியின் சபதம் நிறைவேறியது.

அதனைத் தொடர்ந்து - கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டிணம் அருகே காவிரி சங்கமத்தில் (பஷிமா வாஹினி) என்.டி.ராமராவின் அஸ்தியை அவர் கரைத்தார். 'இப்போதுதான் எனது மனச்சுமை இறங்கி, நிம்மதியாக இருக்கிறேன்' என்று கூறிய லட்சுமி பார்வதி அடுத்த மாதம் அரித்துவார் அருகே கங்கை நதியில் தனது கணவர் அஸ்தியை கரைக்கப்போவதாகத் தெரிவித்தார்.

# மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள்

(ஆழியவளை)

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்களை இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள்- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன், பட்டச்சான்றிதழின் பிரதி, பிறப்புச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த யூன் மாதத்தில் நடைபெறவுள்ளது. (122)

# வீதி விளக்கு அமைப்பது குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் நவீன வீதி விளக்குகளை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.மாநகரசபை இந்து விடுதிக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் நல்லூர், யாழ்ப்பாண பிரதேச செயலர்கள் மின்சாரசபை பிராந்திய முகாமையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நவீன வீதி விளக்குகளை அமைக்கும் செயற்பாடு நிகொட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

### தீவக வலய மட்ட மெய்வன்மைப் போட்டி

யாழ்.மாவட்ட கல்வி வலயத்திற்கு உட்பட்ட தீவக வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)


நாகம்ஸ் சுன்னாகம்



3 ஆவது வெற்றிவாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த

அருள் (ரீல்ஸ்) (சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி


# நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

| திகதி | நேரம் | தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இடம் |
|---|---|---|
| 19.05.2004 | காலை 09-12 வரை | நல்லூர் பிரதேசசபையின் உப-அலுவலகம், கொக்குவில். |
| ,, | மாலை 02-03 வரை | காளிகோவிலடி கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |
| 20.05.2004 | காலை 09-10.30 வரை | கிராம அபிவிருத்திச் சங்கம், ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| | காலை 10.30-12 வரை | பாரதி ச.ச.நிலையம் புதிய வீதி, ஆறுகால்மடம். |
| | மாலை 02.03 வரை | கொக்குவில் ச.ச.நிலையம், பழைய தபால்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை.

(சி-2530)


நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந்த், கனகா நடித்த

கோவில் காளை

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00,9.00(பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)

SLIVER

(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த

கில்லி



காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)

21 ஆம் திகதி முதல்

ஆயுதஎழுத்து

(சி-2387)


# மறுப்பு அறிவித்தல்

08.05.2004 இல் உதயன் பத்திரிகையின் 11ஆம் பக்கத்தில் யாழ்ப்பாணம், இல:262, பிரதான வீதியைச் சேர்ந்த சின்னையா கமலாதேவி என்பவரால் வெளியிடப்பட்ட அறிவித்தலில் விபரிக்கப்பட்ட ஆதனம் - குறித்த சின்னையா கமலாதேவிக்குச் சொந்தமானதல்லவென்றும், அவ்வாதனம் 1980 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24ஆம் திகதி நொத்தாரிஸ் மு.சு.இரத்தின சிங்கத்தால் 9022ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதிப்படி எனது மகனான ஸ்ரீ கிருஷ்ணபாலன் ஸ்ரீ வேணுபாலனுக்குச் சொந்தமானதென அறியத்தருகின்றேன்.

செ.ஸ்ரீ கிருஷ்ணபாலன்

(சி-732)


பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 20% - 50% வரையிலான கழிவுகள் பாடப் புத்தங்களுக்கும், புத்தங்களுக்கும் வழங்கப்படும்.

உங்கள் பிள்ளைகளுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்

மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்கள், புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள் (வானியல்), நுணுக்குக் காட்டிகள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புகள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2531)

# லக்ஷ்மன் கதிர்காமரின் கூற்றுக்கு புலிகள், கூட்டமைப்பு ஆட்சேபம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவில் வெளியிட்ட சில கருத்துக்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடுமையான ஆட்சேபத்தை தெரிவித்துள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமரின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும் என, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ தேசியத் தலைவரை நாடு கடத்துமாறு இந்தியாவின் புதிய அரசாங்கம் கோரிக்கை விடலாம் என்றும், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தன்னாட்சி அதிகார சபை ஆலோசனைகள் தனிநாட்டுக்கு வழிவகுக்கக் கூடியவை என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவில் ஊடகமொன்றிடம் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வேளையில், அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், லக்ஷ்மன் கதிர்காமரின் இத்தகைய கருத்துக்கள் இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பாதிக்கலாம் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இதேவேளை, தமிழீழத் தேசியத் தலைவரை இந்தியாவின் புதிய அரசாங்கம் நாடு கடத்துமாறு கோரலாம் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளும் நகைப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, லக்ஷ்மன் கதிர்காமர் வேண்டுமானால் வன்னி வந்து தமது தலைவரை நாடு கடத்துவதற்கு முயற்சிகளைச் செய்யலாம் எனத் தெரிவித்தார்.




அண்மையில் திருமலைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் கிறிஸ்ரீனா றொக்கா வியாபாரக் கற்கைக்கான ஆங்கில நிலைய கட்டடத்தை திறந்துவைத்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (04)

## ஆளும்கட்சி அமைப்பாளர் பதவியிலிருந்து ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நீக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான அமைப்பாளர் பதவியிலிருந்து வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதவி விலக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

பிரதம அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், இதற்குப் பதிலாக பதில் அமைப்பாளர் பதவி வழங்குவதாகவும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதம அமைப்பாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அறிவித்ததை ஏற்றுக்கொண்ட அவர், பதில் அமைப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். (01)

## மாகாணசபைத் தேர்தலில் இ.தொ.கா. முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதற்கு முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளன.

இந்த இரண்டு கட்சிகளும் கடந்த பொதுத்தேர்தலில் சில மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தும், ஏனைய மாவட்டங்களில் அந்தக் கட்சியை ஆதரித்தும் போட்டியிட்டன.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்துகொள்வது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறும் நிலையில் இந்தக் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்துள்ளன.

## பத்து வயது மாணவி மீது பாலியல் பலாத்கார முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாண்டவன்வெளி கிறிஸ்தவ தேவாலயத்தில் திருமறைக் கலாமன்றம் நடத்தும் வகுப்பிற்குச்சென்ற பத்து வயது மாணவி மீது, அங்கு கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட முனைந்துள்ளார்.

குறித்த மாணவி, ஆசிரியரின் இந்தச் செயலைத் தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதனையடுத்து பெற்றோரும் அந்த ஊர் மக்களும் இணைந்து குறித்த ஆசிரியரை நையப்புடைத்த பின்னர் தாண்டவன் வெளியிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த ஆசிரியரின் இந்தத் தவறான பலாத்கார முயற்சிக்கு தான் பெற்றோரிடமும் பொது மக்களிடமும் மன்னிப்புக் கோருவதாக கிறிஸ்தவ தேவாலய மத போதகர் தெரிவித்தார்.

## அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் ஜே.வி.பியினர் ஈடுபட்டுவருகின்றார்களாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள் ஒரு குழுவினைத் தோற்றுவித்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சிகளில் ஜே.வி.பி. ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை உள்ளிட்ட சில கோரிக்கைகள் அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படுவதைத் தடுக்கும் ஒரு முயற்சியாகவே இந்தக் குழு அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இந்தக் குழுவினைத் தோற்றுவிப்பது தொடர்பான முயற்சிகளில் ஜே.வி.பி.யின் தலைவரான சோமவன்ச அமரசிங்கவின் தலைமையிலான அதன் மத்திய குழு உறுப்பினர்கள் ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளான ஈ.பி.டி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, அஷ்ரப் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடனும் இதுதொடர்பாக ஆலோசனைகளில் ஜே.வி.பி. ஈடுபடவுள்ளதுடன், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

தாம் எதிர்க்கட்சியாக இருந்த போது தெரிவித்த பல கருத்துக்களுக்கு மாறாக, இப்போது விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடாத்த ஜனாதிபதி சந்திரிகா இணங்கியுள்ளதை ஜே.வி.பி. உட்பட்ட முன்னணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.

இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசியல் தலைவர்களுடன் விரைவில் பேச்சு நடத்தப்படுமாம்! சந்திரசேகரன் தெரிவிப்பு

மலையக மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தூதுக்குழுவினர், ஜுலை மாத இறுதியில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, மறு மலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் ஆகியோரையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினையில், தமிழகத் தலைவர்களின் பங்களிப்பு எந்தளவு முக்கியம் என்பதைப் பற்றி தெளிவுபடுத்தினர்.

இலங்கை இனப்பிரச்சினை தமிழக அரசியலுக்குச் சம்பந்தப்பட்டதல்ல என்ற நோக்கத்தோடு செயல்படுகின்ற நிலை மாறவேண்டும் என்றும்,

இலங்கை வாழ் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினை நூறு ஆண்டு காலமாக நீக்கப்படாமல் உள்ளது என்ற வரலாற்று பின்னணியைப் புரிந்துகொண்டு இந்திய அரசியல்வாதிகள் செயற்படவேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், இந்தக் கருத்தினை அனைத்து இந்தியத் தலைவர்களிடமும் விளக்கப்படும் என்றும் உறுப்பினர் பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

தமிழக தலைவர்களுடனான சந்திப்புத் தொடர்பாகவும், புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனுடன், நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் தினேஸ்வீரக்கொடி ஆகியோர் அடங்கிய மேற்படி தூதுக்குழுவினர் நேற்றுப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸையும் சந்தித்தனர். (01)

## புலிகளுடனான பேச்சுவார்த்தைக் குழுவில் கதிர்காமரின் பெயர் இடம்பெறவில்லை

### புதிய அரசுக்குள் குழப்பம்

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைக்குழுவில் சிறிலங்காவின் அரச தரப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை இணைத்துக் கொள்ளாத விவகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் நலன்கணைப் பேணும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் பல தடைசெய்வதற்கு காரணமாகவிருந்த லக்ஸ்மன் கதிர்காமர் தற்போது அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சபையில் உள்ள சிலர் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தநிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான அரச தரப்புப் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் ஜனாதிபதி சந்திரிகாவும் , அவரது நெருங்கிய அரசியல் ஆலோசகர்களுமே ஈடுபட்டதாகவும் தெரிய வருகின்றது.

## கூரைத் தகடுகளைப் பதுக்கியதாக ஐ.தே.க. பிரமுகர்கள்மீது விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக் காலத்தில் கூரைத் தகடுகள் பல இடங்களில் பதுக்கி வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான எம்.எச்.மொகமட், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லிலாந்த பெரேரா மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஜானக மல்லி மாராச்சி ஆகியோர் மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பல இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கூரைத் தகடுகளைக் கண்டுபிடித்த பின்னரே பொலிஸார் இந்த அரசியல்வாதிகள் மீது விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இவ்வளவு பெருந்தொகையான கூரைத் தகடுகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதியளித்தமை தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சுமார் மூவாயிரம் கூரைத் தகடுகளின் இடங்களை பொலிஸார் இதுவரை கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் டெங்கு: ஒருவர் பலி; 9 பேர் பாதிப்பு!

மட்டக்களப்பு மருதமுனை பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலினால் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஒன்பதுபேரும் மருதமனை சுற்றயல் கூறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி பாருக் தெரிவித்தார்.

அண்மைய சில நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வட - கிழக்கு சுகாதார ஊழியர்கள் இருநாள் சுகவீன லீவுப் போராட்டம்

வடக்கு - கிழக்கில் சுகாதார அமைச்சின் கீழ்வரும் சுகாதார நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சகல ஊழியர்களும் நாளையும், நாளை மறுதினமும் சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கிய பின் விடுவிக்கப்பட்ட பொதுச் சுற்றறிக்கையின்படி கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சம்பள உயர்வு வழங்கப்படாததைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கும், சுகாதார தேசிய வைத்திய சேவைகள் அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தும், எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை வழிநடத்துவது தொடர்பான அறிவூட்டல் கூட்டங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை வைத்தியசாலைகளில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதல் ஒருநாள் போட்டியில்

# பங்களாதேஷ் கிரிக்கெட் அணியை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்!



பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கும் இடையேயான 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதல் போட்டி கிங்ஸ்ரவுணில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 46.4 ஓவர்களில 9 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

44 ஆவது ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இருந்தது. கடைசி விக்கெட்டுக்கு எட்வேட்ஸ், பிராட்ஷா இருவரும் தாக்குப்பிடித்து விளையாடி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தனர். வலிமை குறைந்த பங்களாதேஷ் அணியிடம் மேற்கிந்தியத் தீவுகள் போராடி வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

லாரா இந்தப் போட்டியில் விளையாடாத நிலையில் - சர்வான் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டனாகச் செயற்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷ் அணியை முதலில் துடுப்பெடுத்தாடக் கேட்டுக்கொண்டது.

ஷஹாரியார், மன்ஜுரல் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். முதல் ஓவரிலேயே ஓட்டமெதுவும் எடுக்காமல் ஷஹாரியார், பஷார் ஆகியோரின் விக்கெட்டுக்களை பங்களாதேஷ் அணி இழந்தது.

2 ஆவது ஓவரில் மன்ஜுரல் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்க 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை பங்களாதேஷ் இழந்தது. அடுத்து வந்த வீரர்களும் தாக்குப்பிடித்து விளையாடவில்லை.

பங்களாதேஷ் அணி வீரர்கள் வரிசையாக விக்கெட்டுக்களை சொற்ப ஓட்டங்களுக்கு இழந்தனர். 50 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்த பங்களாதேஷ் அணி 144 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷ் அணியின் சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்தவர் முகமது ரபீக். இவர் 59 பந்துகளில் 32 ஓட்டங்களையும், காலித் மசூத் 30 ஓட்டங்களையும் பெற்று இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். இருவரும் 9 ஆவது விக்கெட்டுக்கு 62 ஓட்டங்களைச் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக ஒருநாள் போட்டிகளுக்கு அறிமுகமான டினோ பெஸ்ட் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

145 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி - 83 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது. கெய்ல் ஓட்டமெதுவும் எடுக்காமலும், ஜோசப் 7 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 15, பவல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்த 50 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து 43.4 ஓவரில் 133 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்கள் என்ற இக்கட்டான நிலையில் இருந்தது.

9 ஆவது விக்கெட்டுக்காக பிடல எட்வேட்ஸுடன் இணைந்த பிராட்ஷா ஒரு சிக்ஸர் அடித்து வெற்றியிலக்கை எட்ட உதவினார். பிராட்ஷா, எட்வேட்ஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 12, 1 ஓட்டத்துடன் இருந்தபோது 145 ஓட்டங்களை எடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது. ஆட்டநாயகனாக பிராட்ஷா தெரிவு செய்யப்பட்டார்.

# அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் சிம்பாப்வே பயணம் அர்த்தமற்றது!

## ஸ்ரீவ் வோ கருத்து



அவுஸ்ரேலிய அணியின் சிம்பாப்வே பயணம் அர்த்தமற்றது என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ் வோ தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணி தேர்வில் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக முழுமையான சிம்பாப்வே அணி விளையாடமுடியாத நிலை இருந்து வருகிறது. இதனால், அவுஸ்ரேலிய அணியின் சிம்பாப்வே பயணம் அர்த்தமற்றது என ஸ்ரீவ் வோ தெரிவித்தார்.

சிம்பாப்வே அணிக்கு எதிராக 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட அவுஸ்ரேலிய அணி தற்போது சிம்பாப்வே சென்றுள்ளது. இந்தப் பயணம் குறித்து ஸ்ரீவ் வோ கருத்துக் கூறும்போது - தற்போது இருக்கும் சிம்பாப்வே அணியுடனேயே அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து விளையாடினால் இந்தப் பயணமானது ஏறக்குறைய நேரத்தை வீணடிக்கும் பயணமாகும்.

இந்தத் தொடரில் அவுஸ்ரேலியாதான் வெற்றிபெறும். இதில் எந்த சந்தேகமும் இல்லை. சவாலான போட்டிகளில் விளையாடியே பழக்கப்பட்டு விட்ட அவுஸ்ரேலியா- தற்போதிருக்கும் சிம்பாப்வே அணியுடன் விளையாடுவது சிரமமாக இருக்காது.

ஆனால் தங்களுடைய வழக்கமான ஆட்டத்தை இந்தத் தொடரில் அவுஸ்ரேலிய அணி வெளிப்படுத்தும் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தத் தொடரில் அவுஸ்ரேலிய அணி முழுமையான அணியாக களமிறங்குகின்றது என்று 38 வயதான ஸ்ரீவ் வோ தெரிவித்தார்.

அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள ஸ்ரீவ் வோ கடந்த ஜனவரி மாதம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# சம்பியன்ஸ் டிரொபி தொடக்கவிழாவில் பாகிஸ்தான் சார்பில் முகமது சமி!

## பத்திரிகைகள் சந்தேகம் கிளப்புகின்றன



(இஸ்லாமாபாத்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் டிரொபி கிரிக்கெட் போட்டி தொடக்கவிழாவில் கலந்து கொள்ள வேகப்பந்து வீச்சாளர் முகமது சமியின் பெயரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சிபார்சு செய்தது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் டிரொபி கிரிக்கெட் தொடக்கவிழா நேற்று லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொள்ள அணியின் கப்டன் அல்லது மூத்த வீரர்களை பரிந்துரை செய்வது வழக்கமாகும். ஆனால் வியப்பளிக்கும் விதமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முகமது சமியின் பெயரை பரிந்துரை செய்துள்ளதை 'புதிய நடவடிக்கை' என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பாகிஸ்தானில் வெளியாகும் பத்திரிகையான த நியூஸ் வெளியிட்டுள்ளது. இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கவுண்டி போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் பலர் விளையாடி வந்தாலும், 22 வயதான முகமது சமியை தொடக்க விழாவில் கலந்துகொள்ள பரிந்துரை செய்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து த நியூஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது -

சக்லைன் முஸ்தாக், சொகைப் அக்தர், அசார் முகமது போன்ற சிரேஷ்ட வீரர்கள் இங்கிலாந்து கவுண்டி போட்டிகளில் விளையாடி வந்தாலும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் சம்பியன்ஸ் டிரொபி தொடக்கவிழாவுக்கான அணிகள் வரிசையில் இடம்பெறவும், புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் இளம் வேகப்பந்து வீச்சாளரான முகமது சமியின் பெயரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிகிறது.

புதிய நடவடிக்கை என்ற பெயரில் முகமது சமியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக அணியின் கப்டன் சிரேஷ்ட வீரர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்படுவது உண்டு. இதுபோன்ற பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள கப்டன் இன்ஸமாம் அனுப்பப்படல் வேண்டும். இல்லையென்றால் முகமது சமியை விட சிரேஷ்ட வீரர்களான சக்லைன் முஸ்தாக் அல்லது சொகைப் அக்தரை கிரிக்கெட் சபை பரிந்துரை செய்திருக்கலாம் என்று த நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், முகமது சமியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டதற்கான விளக்கத்தை கிரிக்கெட் சபை அளித்துள்ளது. அதாவது இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்பவரின் பெயரை சர்வதேச கிரிக்கெட் சபை கேட்டபோது சக்லைன், அக்தார் இருவரும் கவுண்டி போட்டிகளில் விளையாடி இங்கிலாந்து செல்வது உறுதிசெய்யப்படாமல் இருந்தது. அதனால் சமியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கமளித்துள்ளது.

## முரளியின் பந்துவீச்சு சர்ச்சை

# ஐ.சி.சி மீது வழக்குத் தொடர இலங்கை அரசு முடிவு!



(கொழும்பு)

சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடை விதித்ததை எதிர்த்து சர்வதேச கிரிக்கெட் சபை மீது இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழக்குத் தொடரவுள்ளார்.

முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடரப்போவது குறித்து - பிரதமர் ராஜபக்ஷ அறிக்கை விடுத்துள்ளார். தூஸ்ரா பந்துவீச்சை நிறுத்தும்படி கிரிக்கெட் சபை முரளிதரனிடம் கோரியிருந்தாலும், முரளிதரனுக்கு பிரதமர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடைவிதித்த சர்வதேச கிரிக்கெட் சபையின் முடிவை எதிர்த்து பிரதமர் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளார். இது குறித்து வழக்கறிஞர் குழுவுடன் பிரதமர் ஆலோசனை நடத்திவருகிறார் என்று பிரதமர் அலுவலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

முரளிதரன் இலங்கையின் விலைமதிப்பற்ற சொத்து என்றும், தன்னுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு தன்னால் முடிந்த அனைத்தையும் முரளிதரனுக்காக செய்யப்போவதாக ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு தடை விதித்த சர்வதேச கிரிக்கெட் சபை - இனிமேலும் தூஸ்ரா பந்துவீச்சை முரளிதரன் தொடர்ந்தால் ஓராண்டு தடை விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

# ஓய்வினை அறிவித்தார் சிம்பாப்வே வீரர் எர்வின்

(ஹராரே)

சிம்பாப்வே கிரிக்கெட் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள 15 வீரர்களில் ஒருவரான சீன் எர்வின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வினை அறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை சிம்பாப்வே கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி வின்செண்ட் ஹோக் உறுதிசெய்துள்ளார். ஓய்வு பெறுவதாக எர்வின் அனுப்பியுள்ள கடிதம் தன்னிடம் வந்திருப்பதாக வின்செண்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் - எர்வின் ஒரு அருமையான இளம் வீரர். தனது கிரிக்கெட் வாழ்வின் துவக்கத்திலேயே அவர் மோசமான நிலையைச் சந்திக்க நேர்ந்துவிட்டது. இதனால் அவர் ஓய்வு பெறும் விடயம் மிகவும் கடினமானது என்று கூறினார்.

சீன் எர்வின் இதுவரை 5 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். 261 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். கடைசி 3 இனிங்ஸ்களிலும் அவர் அரைச்சதம் அடித்துள்ளார்.

42 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 698 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். 41 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இவ்வருட தொடக்கத்தில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற வி.பி தொடரில் இந்தியாவுக்கெதிரான போட்டியில் எர்வின் 100 ஓட்டங்களைக் குவித்தது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க போட்டி விதிகள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினருக்கு போட்டி விதிகள் தொடர்பான விளக்கக் கூட்டம் நாளை மாலை 5 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அஸ்ரா கிண்ணத்திற்காக பாடசாலை மட்ட 14, 16 வயது பிரிவினருக்கான போட்டிகள் தொடர்பாகவே இக் கூட்டம் நடைபெறவுள்ளதெனவும், எனவே கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களை தவறாது இக் 'கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

# முதல் டெஸ்டில் பொண்ட் ஆடவில்லை!



பிளெமிங் தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி 20 ஆம் திகதி தொடங்குகின்றது.

இதில் நியூஸிலாந்து அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளரான பொண்ட் ஆடவில்லை. அவர் இன்னும் முழு உடல் தகுதி பெறாததால் முதல் டெஸ்டில் ஆடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொண்ட் கடந்த ஆண்டு கடைசி முதலே உடல் தகுதியில்லாமல் அதிக போட்டிகளில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்து கலாசார அமைச்சில் பணியாற்றிய இருபது ஊழியர்கள் பதவி நீக்கம்!

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அமைச்சினால் கடந்த இரண்டு வருடங்களாகக் கடமைபுரிந்த 20 இற்கும் மேற்பட்ட அமைய உத்தியோகத்தர்கள் புதிய அரசின் கீழ் நிறுவப்பட்டுள்ள கமத்தொழில்சார்ந்தவிற்பனை அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள், கல்வி, வாழ்க்கைத்தொழிற்பயிற்சி உதவும் அமைச்சின் மூலமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பணி நீக்கம் தொடர்பான கடிதங்கள் அமைச்சின் செயலாளர், கே.மகானந்தனின் ஒப்பத்துடன் மேற்படி உத்தியோகத்தர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்கள் முன்னாள் இந்துசமய விவகார அமைச்சரால் நியமனம் பெற்ற மாவட்ட இளைஞர், யுவதிகள் ஆவார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் இந்துசமய விவகாரத்துறைக்கென தனியானதொரு அமைச்சு உருவானபோது, அமைச்சில் நிலவிய பதவிகளுக்கென, முன்னாள் அமைச்சர் - எழுதுநர், கணினி இயக்குநர், சிற்றூழியர் போன்ற பல பதவிகளுக்கும் இந்த இளைஞர், யுவதிகளை நியமித்திருந்தார்.

ஏறத்தாழ இருவருடங்கள் இந்த அமைச்சில் பணிசெய்த மேற்படி இளைஞர், யுவதிகள் முன்னைய அமைச்சு மேற்கொண்ட பாரிய செயற்திட்டங்களான 2 ஆவது உலக இந்துமாநாடு, தேசிய தீபாவளிதினக்கொண்டாட்டம் போன்றவற்றிற்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

இவர்கள் அனைவரும், தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என நம்பியிருந்த நிலையில், தம்மை பணிநீக்கம் செய்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயமாக நேரில் விளக்கமளிப்பதற்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்க, தாம் முயற்சி செய்தபோதும், வாய்ப்புக் கிடைக்கவில்லை என மேலும் தெரிவித்தனர்.

உத்தியோகத்தர்கள், அரசியல் ரீதியாக பழிவாங்கப்படவோ, பணி நீக்கம் செய்யப்படவோமாட்டார்கள் என ஜனாதிபதி அறிவித்திருந்த போதும், தம்மை பணி நீக்கம் செய்தமை நட்டாற்றில் விட்ட நிலையை ஏறபடுத்தியுள்ளதாகப் பட்டதாரி யுவதி ஒருவர் தெரிவித்தார்.

தாம் பணி நீக்கம் செய்யப்பட்டமை அறிந்த பெற்றோர் மிகவும் வேதனையும், ஏமாற்றமும் அடைந்துள்ளதாகவும் ஒருவர் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றங்களும், அரசியல்வாதிகளின் எண்ணப்போக்குகளும் தமிழ் இளைஞர்களான தமது வாழ்வையே கேள்விக்குறியாக்கிவிட்டதாக தெரிவிக்கும் இந்தஇளைஞர்கள் தமது இந்த நிர்க்கதி நிலை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள எவருமே முன்வரவில்லை எனவும் விசனம் தெரிவித்தனர்.

# சமுகவிரோத செயல்களில் இனிமேல் ஈடுபடக்கூடாதென எச்சரித்தனர்!

## எல்லாளன் படையால் விடுவிக்கப்பட்டோர் தெரிவிப்பு

எம்மை வானில் கடத்திச் சென்றவர்கள் கடுமையாகத் தாக்கிய பின், எம்மை யாழ். நகரச் சந்திகளில் இறக்கிவிட்டுச்சென்றனர் என, கடந்த சனிக்கிழமை எல்லாளன் படையின் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட மூன்று இளைஞர்களும் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் யாழ். பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு, பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

நாவாந்துறை சாந்தி வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே இந்தத் தகவலை தெரிவித்தனர். அவர்கள் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது-

வெள்ளை வானில் வந்த சிலர் எம்மை எமது வீடுகளில் வைத்து ஏற்றிச் சென்று, கண்ணைக்கட்டிவிட்டு, வீடு ஒன்றில் வைத்து தாக்கினர். நாம் நான்கு பேர் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தோம். நாம் குற்றம் புரிந்ததாகக் கூறி, எம் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பின்னர் எமது குற்றச் செயல்களுக்கெல்லாம் தலைமைதாங்கினார் என்று கூறி, எம்முடன் அழைத்துவரப்பட்ட சந்திர லலித்தை கடுமையாகத் தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

எம்மையும் வயர்கள், கம்பிகள் கொண்டு தாக்கிவிட்டு, இனிமேல் எந்தவித சமுகவிரோதச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது என எச்சரித்துவிட்டு, யாழ்.நகரப்பகுதியிலுள்ள சந்திகளில், தனித்தனியே இறக்கிவிட்டுச் சென்றனர் எனத் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தனர்.

# வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் பெருமளவு பொருட்கள் நாசமாகின

மீசாலை மேற்குப் பகுதியில் கடந்த புதன்கிழமையன்று, மேசன் தொழிலாளர்கள் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த சமயம், வீட்டின் சுவர் இடிந்துவிழுந்ததில் அந்த வீட்டின்பெருமளவு பொருட்கள் நாசமாகின.

அன்றையதினம் மேசன் தொழிலாளர்கள் வேலைசெய்துகொண்டிருக்கும்போது, அந்த வீட்டின் குடும்பத்தினரும், அயல் வீட்டாரும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த நேரம் குரங்குகளைத் துரத்துவதற்கு, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தவர்கள் வெளியில் சென்று துரத்திய போது, சுவர்கள் இடிந்துவீழ்ந்து, தொலைக்காட்சிப்பெட்டி, டெக், வீட்டுத் தளபாடங்கள் ஆகியன சேதமடைந்தன. தெய்வாதீனமாக வெளியில் குரங்கு துரத்தச் சென்றோர் உயிர்தப்பினர்.

இந்தக் கட்டட இடிவுக்கு தொழிலாளர்களின் கவனக்குறைவே காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் மீசாலை மேற்கு எஸ்.மார்க்கண்டு என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றது. (25)

## 749 ஆம் இலக்க பஸ்சேவையை புதிய பாதையூடாக விஸ்தரிக்கவும்

(சுதுமலை)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் 749 இலக்கமுடைய பஸ் சேவையினை புதிய பாதையூடாக விஸ்தரிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

749 இலக்க பஸ்சேவை யாழ்-மானிப்பாய் ஊடாக இடம்பெற்றது. இந்தச் சேவையினை நவாலி - கட்டுடை குடியேற்றத்திட்டம் - சண்டிலிப்பாய் ஊடாக மேற்கொண்டு அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை நிவர்த்திசெய்மாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக உரியவர்களிடம் வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளர் கேட்டுள்ளார். (91)

## வருடாந்த பொதுக்கூட்டம்

சாவகச்சேரி வடக்கு கிராம்புவில் படையாண்டான் தோட்டம் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும். இறைவணக்கம், செயலாளர் அறிக்கை, பொருளாளர் கணக்கறிக்கை என்பவற்றுடன் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும். (24)

## வரலாற்றுக்கழக அங்கத்தவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழக அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று, நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வரலாற்றுத்துறை விரிவுரைமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து வரலாற்றுக்கழக அங்கத்தவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வரலாற்றுக்கழகத்தினர் கேட்டுள்ளனர் (ப)

# திருமுறைகளை முறையாக ஓதினால் பல பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம்

## இணுவில் சைவ திருநெறிக்கழகத் தலைவர் உரை

திருமுறைகளை மக்கள், முறையாக ஓதிவராமையால்தான், இன்று பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம்கொடுக்கவேண்டியுள்ளது. திருமுறைகளை முறையாக ஓதும்போது, பல நன்மையான விடயங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என, இணுவில் சைவத்திருநெறிக் கழகத் தலைவர் கெ.தவராசா தெரிவித்தார்.

இணுவில் கிராமத்தின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் 'சீர்இணுவைத் திருவூர்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று எமது மாணவர்கள் சமயக் கல்வியை வெறும் பரீட்சையை எதிர்நோக்கி மட்டுமே, கற்றுக்கொண்டிருக்கிறார் கள். இது தவறானதொரு விடயமா கும். அதனாலே, மேல் வகுப்பு மாணவர்களிடம் கீழ் வகுப்புக்குரிய தேவாரங்களைக் கேட்கும்போது அவர்கள் தெரியாது என்கிறார்கள். ஏனெனில் பரீட்சை முடிந்ததும் அதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். அறநெறிப்பாடசாலைகளில் மாத்திரமன்றி, பாடசாலைகளிலும் திருமுறை வகுப்புக்களை நடத்துவதன் மூலமாகத்தான் இந்த நிலையை மாற்றியமைக்கமுடியும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆசிரியர் ஆறு.திருமுருகன், எமது வரலாறுகளை எமது வருங்கால சந்ததிகள் கற்கத் தக்கவகையிலே ஆவணப்படுத்தி வைக்கவேண்டும். வரலாற்றை ஆவணப்படுத்தல் என்பது கடினமான விடயமாக இருந்தாலும், அந்த முயற்சியில் அனைவரும் ஈடுபட முன்வரவேண்டும். இப்போது கிராமங்கள் தோறும் இவ்வாறான வரலாற்றை ஆவணப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இது வரவேற்கத்தக்க விடயமாகும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டதுடன், இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (94)

# வடமராட்சியில் 95 வீதமான சிறார்கள் முன்பள்ளிகளுக்குச் செல்கின்றனர்!

இமையாணன் மேற்கு உடுப்பிட்டி சனசமுக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப்போட்டி, போரூட் அனுசரணையுடன், கடந்த சனிக்கிழமை சனசமுகநிலையம் முன்பாக முறைசாரப்பிரிவு ஆசிரியையும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவியுமான சிவதர்சினி தலைமையில் இடம் பெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி முன்பள்ளி பிரதிக்கல்விப் பணிப்பாளர் துரைசதியசீலன் இடைக்கால தன்னாட்சிக்குரிய அதிகாரம் விடுதலைப் புலிகளின் கையில் வரும்போது, பெண்களுக்கும், குழந்தைகளுக்குமான அபிவிருத்திக்கு முக்கிய இடமளிக்கப்படும் என, தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கூறியுள்ளார். எனவே, வெகுவிரைவில் முன்பள்ளி ஆசிரியர்களினதும், சுகாதாரத் தொண்டர்களினதும் வாழ்நிலை மிக உயர்ந்த நிலைக்கு வருமென்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

ஒரு நாள் ஊதியமாக 30 ரூபா கூட இன்றி சேவையாற்றும் ஆசிரியைகளான நீங்கள், இன்னும் சிறிதுகாலம் அர்ப்பணிப்புடன் உங்கள் சேவையை முன்னெடுத்துச் செல்லுங்கள். நமது எதிர்காலச் சந்ததியின் ஒளிமயமான வாழ்வுக்கு அத்திவாரமிடும் ஆசிரியைகளை சமுதாயம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கும். முன்பள்ளிக் கட்டமைப்பு சீராக ஒழுங்குபடுத்தப்படுமிடத்து, பாடசாலைக் கல்விக்கு சிறார்கள் தூண்டப்படுவர். இடைவிலகல் குறைவடையும்.

தற்போது வடமராட்சிப் பகுதியில் 95 வீதமான சிறார்கள் முன்பள்ளியை நோக்கி வந்துள்ளார்கள் என்ற தகவலைத் தருகையில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன் எனத் தெரிவித்தார். (116)

## மேசன் தொழிலாளர்களுக்கு திருமலையில் 5 நாள் பயிற்சி!

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தினால், இரண்டாவது தொகுதியாக குடாநாட்டு மேசன் தொழிலாளர்களுக்கு, திருகோணமலை சீனன் குடாவிலுள்ள பயிற்சி நிலையம் ஒன்றில் ஐந்துநாள் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

குடாநாட்டிலுள்ள ஆர்வமுள்ள மேசன்தொழிலாளர்கள் தங்கள் பெயர், முகவரி, அடையாளஅட்டை இலக்கம் என்பவற்றை, யாழ்.செயலகத்தில் இயங்கும் தொழிற்துறை திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு, மாவட்ட அலுவலர் ப.ராகவன் கேட்டுள்ளார்.

அண்மையில் யாழ். மாவட்டத்திலிருந்து, பயிற்சிநெறியை முடித்து 30 மேசன் தொழிலாளர்கள் வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.







குமுதினி படகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில், பொதுச்சுடரை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைப்பதையும், சிறு படகு மூலம் சம்பவம் நடைபெற்ற இடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதையும், படுகொலைச் சம்பவத்தில் தனது மூன்று உறவுகளை இழந்த ஒருவர் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். (113)



# பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை



பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைமூலம் ஆணைப் பெண்ணாக்கக்கூடியளவுக்கு மருத்துவத்துறை வளர்ந்து கொண்டு வருகின்ற இன்றைய உலகில் - பிளாஸ்ரிக் சத் திர சிகிக்சை என்பது ஏதோ பெயின்ட் அடிப்பது என்று நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, ஒரு செருப்படியாகப் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையினை தொலைக்காட்சிமூலம் பார்க்கக்கூடியவாறு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டு வருகின்றன.

இது சர்வதேச அளவில் எம்.ரி.வி. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுக்கொண்டு வருவதனால், மக்களுக்குப் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை பற்றிய கஷ்டநஷ்டங்களை எடைபோடக்கூடியவாறு இருக்கின்றது.

ஆனால், வைத்தியர்கள் மட்டத்திலிருந்து மிகப்பெரிய எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. இது தங்களுடைய அடிப்படை உரிமைமீறல் என்ற வாசகத்தினை வைத்தியர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள். தாங்கள் கஷ்டப்பட்டு செய்கின்ற மருத்துவ சாதனங்களை இவர்கள் எப்படி ஒளிபரப்பலாம் என்கிறார்கள்.

உண்மையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்வது என்பது பிரமன் கொடுத்த வடிவத்தை மாற்றுவது என்ற பெரிய செயல்தான்.

# அழிந்த விலங்குகள்



ஊண் உண்ணும் விலங்குகளாகிய (Carnivores) பல பெரிய விலங்குகள் வாழ்ந்ததற்கான [illegible] சிட்னியிலுள்ள ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மண்ணில் காணப்பட்ட கனிச்சத்துகளின் குறைபாடு காரணமாக இந்த விலங்குகள் அழிந்து போனதாக கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவித்திருந்தன.

தாவரங்கள் அழிந்து போனதன் விளைவாக அவற்றை உணவாகக் கொண்ட விலங்குகள் அழிந்து போனதாகவும், இத்தாவர உண்ணிகளின் அழிவினால் ஊன் உண்ணிகள் அழிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.



ஆனால் சிட்னி ஆய்வாளரான ஸ்டெபென் இக்கருத்தினை மறுத்திருந்தார். அவுஸ்ரேலியா ஒரு கண்டமாக காணப்பட்டதாலும், மற்ற நாடுகளுடனான தொடர்புகள் இல்லாமல் காணப்பட்டதும் - இவ்வகையான பெரிய ஊன் உண்ணிகளின் அழிவிற்கு காரணமாக அமைந்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார். குறிப்பாக இவ்வகையான விலங்குகள் அமெரிக்காவிலும் வாழ்ந்திருந்தன என்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

# வயகரா விருப்பும் வெறுப்பும்




பலதரப்பட்ட பக்கவிளைவுகள் இருந்தாலும், அவற்றை எல்லாம் ஒரு பக்கம் தள்ளி வைத்துவிட்டு, வயகரா மாத்திரையின் பாவனை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றது. கூடுதலாக ஆண்களே இந்தவகை மாத்திரையைப் பாவிக்கின்றார்கள் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலான மேற்குலக நாடுகளின் விவாகரத்துக்கு இந்த வயகரா மாத்திரையே காரணமாகின்றது எனவும் கூறப்படுகின்றது. கூடுதலாக 50, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த வயகரா மாத்திரையைப் பாவித்துக் கொண்டு வருகின்றார்கள்.

பெண்கள் அதிகமாக இந்த வயகரா மாத்திரையை வெறுக்கின்றார்கள். இதனால், அவர்கள் விவாகரத்து வரை போகிறார்கள் என்ற கருத்தும் ஒருபுறம் இருக்கின்றது.

ஆனால், 70 வயதான கணவனும், 61 வயதான மனைவியும் நியூயோர்க்கில் மிகவும் தாங்கள் அன்நியோன்யமாக இருப்பதற்குக் காரணம் வயகரா மாத்திரை என்கின்றார்கள்.

நாளாந்தம் ஏறக்குறைய 20 மில்லியன் ஆண்கள் - 110 நாடுகளில் இந்த வயகரா மாத்திரையைப் பாவித்துக்கொண்டு வருகின்றார்கள்.

# தேன்குடித்த பறவைகள்



ஜேர்மனியின் தென்பகுதியில் 30 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹமிங் பறவையின் (Humming birds) படிமங்களை (Fossiles) கண்டுபிடித்துள்ளார்கள்.

இன்று இவ்வகைப் பறவைகள் - அமெரிக்காவில் மர்த்திரமே காணப்படுகின்றன. அந்தரத்தில் நின்றவாறே பூக்களிலிருந்து தேனை உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றல் கொண்டவையாக இந்தப் பறவைகள் காணப்படுகின்றன.

இவை தமது நீண்டு வளைந்த அலகுகளினால் பூக்களிலிருந்து தேனை இலகுவாக உறிஞ்சிக்கொள்கின்றன. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் உருவ அமைப்புக்கள் - இவ்வகை பறவைகளினால் தேனை உறிஞ்சுவதற்கேற்றவாறு பரிமாண வளர்ச்சி கண்டுள்ளதை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஹமிங் பறவைகள் அந்தரத்தில் நின்றவாறே தேனை உறிஞ்சிக்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால், இதன் சிறகின் அமைப்பு முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. பூக்களில் ஹம்மிங் பறவையின் அலகைப் போன்ற வடிவமைப்பை ஆராய்ந்து வருகின்றனர். இதன்மூலம் அவ்வகையான பூக்கள் காணப்பட்ட பிரதேசத்தில் இப்பறவைகள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களையும் தேடிவருகின்றனர்.

# அழியும் மூங்கில்கள்

இன்று அதிக அளவிலான மூங்கில் இனங்கள் அழிந்துவிட்டன. இவை காடுகளின் அழிவினால் ஏற்பட்டுள்ளன. 1200 வகையான மூங்கில் இனங்கள் அழிந்துவிட்டதாகக் கருதப்படுகின்றன.



இவை மனிதர்களுக்கும், காட்டுவிலங்குகளுக்கும் உணவாகப் பயன்பட்டன. மூங்கில் இனங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு பரந்த அளவில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன.

பிரம்பும் (Rattan) மூங்கில் வகையைச் சேர்ந்த புல்லினமாகும். பிரம்பும் அழிந்துகொண்டு செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் ஒருவகை மூங்கில்கள் - நாள் ஒன்றிக்கு நான்கு அடி வளர்வதாகவும் அறிந்துள்ளனர்.

உலகில் கோடிக்கணக்கான மக்கள் - மூங்கில் அரும்புகளை (Shoots) உணவாக உட்கொள்கின்றனர். இவற்றிலிருந்து பத்திரிகைத் தாள்கள், இசைக் கருவிகள், தளபாடங்கள் உருவாக்கப்படுகின்றன. சில நாடுகள் கொங்கிறீட்டை வலுப்படுத்துவதற்கும் மூங்கில்கள் பாவிக்கப்படுகின்றன. 'பண்டா' எனப்படும் கரடிகள் மூங்கில் துளிர்களை மாத்திரமே உணவாக உட்கொள்கின்றன.

ஒருவகை வௌவால்கள் (Bambo Bats) மூங்கில் மரங்களில் மாத்திரமே கூடுகட்டி வாழ்கின்றன. ஆபிரிக்காவில் உள்ள மலைவாழ் கொரில்லாக்கள் (Mountain Gorilla) தமது 40 வீதமான உணவிற்காக மூங்கிலையே சாந்துள்ளன.

# புதிய கிரடிட் கார்ட்



தற்போது பாவனையிலுள்ள கிரடிட் கார்ட்கள் - அகில உலகரீதியாக மக்களின் பாவனையிலிருந்து வருகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற இரகசியக் குறியீடு மிகமுக்கியமானது.

இதனைக் கண்தெரியாதவர்களால் பாவிக்கமுடியுமா? அவர்கள் எவ்வாறு இந்த சந்தேக இலக்கங்களைப் பிரதி செயவது? இப்படியான சிக்கல்களுக்குத் தீர்வாகப் புதியவகையான கிரடிட் கார்ட்கள் தற்போது சந்தையில் உலாவருகின்றன.

புதிய வகையான கிரடிட் கார்ட்களில் காணப்படுகின்ற சிப்ஸ்களில் களவுவேலைகள் செய்து, காசு எடுப்பது தடுக்கப்படுகின்றது.

கிரடிட் கார்ட்களில் செய்யப்படுகின்ற துஷ்பிரயோகத்தினால் பல வங்கிகள் நட்டமடைந்திருக்கின்றன. கிரடிட் கார்ட் பாவிப்பவர்களுக்கு கார்ட்டுடன் ஒரு கீபோட் கொடுக்கப்படுகின்றது. அதனை வைத்துக்கொண்டு, கிரடிட் கார்ட்டின் இலக்கங்கள் பதியப்படுகின்றன.

இதன்மூலம் நிலுவை மற்றும் எடுக்கப்படுகின்ற பணம் ஆகியவற்றை அறியக்கூடியதாக இருக்கின்றது. இதிலே என்ன முக்கிய விடயம் என்றால், கண்தெரியாதவர்களும் இதனைப் பயன்படுத்தலாம்.

## திரை விமர்சனம்

### அருள்



மறுபடியும் சாமி அளவுக்குப் பெரிய வெற்றியைத் தரவேண்டும் என்ற இயக்குநர் ஹரியின் துடிப்பு -படம்பார்க்கும் பொழுது தெரிகின்றது. இதனால் தானோ என்னவோ படம் முழுக்க 'சாமி' மயம். நகைத்தொழில் செய்யும் வினுச்சக்கரவர்த்தியின் மகன் விக்ரம். நகைத் திருட்டு ஒன்றினால் விக்ரமை வினுச்சக்கரவர்த்தி சந்தேகப்பட, இனி தங்கத்தையே தொடுவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டு, மில்வேலைக்குப் போகின்றார். கோயம்புத்தூரையே நடுநடுங்கவைக்கும் எம்.எல்.ஏ.பசுபதியுடனும், அவரது அண்ணன் ஆளுங்கட்சித் தலைவர் கொல்லம் துளசியுடனும் விக்ரமிற்கு மோதல் ஏற்படுகின்றது.

பெரிய இழப்புகளுடன் இவர்களை விக்ரம் அழித்தது மீதிக்கதை. 'அநியாயம் பண்ணினா ஆண்டவனுக்குப் பிடிக்காது அசிங்கமாப் பேசினா அருளுக்குப் பிடிக்காது' என்று படம் முழுக்க ரஜனி ஸ்டைலில் வசனம் பேசுகின்றார் விக்ரம். ஆனால், ரஜனியை அடிக்க முடியாது. பாவாடை தாவணியுடன் படம் முழுக்க ஜொலிக்கின்றார் ஜோதிகா. வடிவேலுவின் சில நகைச்சுவைச் காட்சிகள் ரசிக்கும்படியாக உள்ளன. விக்ரமின் விடுதலைக்காக தனது பணம், நகைகளை தரும் காட்சியில் ஜோதிகா மனதைத் தொடுகின்றார்.



கே.எஸ்.ரவிக்குமார் விக்ரமின் மாமாவாக வந்து, அவருக்குத் துணையாக நிற்கின்றார். ஹரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்கள் சுமாராக இருக்கின்றன. பலவருடங்களுக்குப் பிறகு பழைய துள்ளிசைப் பாடகி எல்.ஆர்.ஈஸ்வரி இப்படத்தில் பாடியிருக்கிறார். ஒளிப்பதிவு ப்ரியன். அருமையான படப்பிடிப்பு.

- PNS

## துருவப்பகுதியிலிருந்து தொலைத்தொடர்பு

துருவப் பகுதிகளில் ஆராய்ச்சியை மேற்கொள்பவர்கள்- இதுவரை செயற்கைக் கோள்மூலம் தமது தொலைத் தொடர்புகளை மேற்கொண்டு வந்துள்ளனர். காந்தப்புலன் (MAGNETIC FIELD) அதிகரித்துள்ள துருவப் பகுதிகளில், சில வகையான தொடர்பு சாதனங்கள் நன்கு செயல்படுவதில்லை.



இதனால், தனிப்பட்டவர்களின் பாவனைக்காக (PERSONAL DIGITAL ASSITANCES) எனப்படும் இலத்திரனியல் கருவிகளை பாவிபதற்கு ஆரம்பித்துள்ளனர். இவை நன்கு செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். அண்மையில் 8 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று, வடதுருவத்திற்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சென்றிருந்தனர்.



தமது குடும்ப உறவினர்களுக்கு டிஜிட்டல் இலத்திரனியல் கருவியின்மூலம் தபால்களை அனுபியுள்ளனர். இந்தச் செய்திகள் கணினி வலைகள் மூலம் இணைக்கப்பட்டு, உறவினர்களுக்கு அறிவிக்கமுடிந்தது. இவர்கள் தமது பிரயாணத்தின் இறுதிப்பகுதியான துருவக்கரடிகள் வாழும் பிரதேசத்தை அடைந்தபோது, உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த பதற்ற நிலையை உடனுக்குடன் அறிவிக்க முடிந்ததாகவும் தெரிவித்துள்ளனர். துருவப் பகுதிகளில் வெப்பநிலை 60° வரை சென்றிருந்தது. இதனால் இலத்திரனியல் கருவிகள் சிறிது சூடாக்க வேண்டியிருக்கலாம் என ஆரம்பத்தில் சிந்தித்தார்கள். ஆனால், மிகுந்த குளிரிலும் நன்கு செயற்பட்டன.

## புற்றுநோயும் முட்டைக்கோசும்



பெருங்குடலில் (Colon) தோன்றும் புற்றுநோயைத் தடுப்பதில், இலைக் கறி வகைகளான முட்டைக்கோஷ், கல்பிரவுப் (Spaouts) ஆகியன முக்கிய பங்கினை வகிப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வகை இலைகளை சமைக்கும்போது, ஒரு வகை இரசாயனப் பொருள் உருவாக்கப்படுவதாகவும், இந்த இரசாயனப்பொருள் பெருங்குடல் புற்றுநோயைக் குணப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பெருங்குடல் புற்றுநோய்க் கலங்கள் அழிந்துவிடுவதன் மூலம், பாதிக்கப்பட்ட கலங்கள் பரவாதிருப்பதற்கும் இவ் இரசாயனப்பொருள் உதவுவதாக மேலும் தெரிவித்துள்ளனர். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை இவ்வகை இலைகள் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம், குடல் புற்றுநோயைத் தடுக்கலாமெனவும் தெரிவித்துள்ளனர்.

மருந்து ஒன்று ஒரு நோயைக் குணப்படுத்துவது போனறு, உணவு வகைகளும் நோயைத்தடுக்கும் ஆற்றல் கொண்டவை என ஆய்வுகளிலிருந்து அறியவந்துள்ளது.

புற்றுநோய் ஆய்வுகள் மேற்கொண்டவர்கள் - எவ்வகையான உணவுகள் சிறந்தவை என்பதை அறிய முற்பட்டவேளையில் இவ்வுண்மையைக் கண்டுபிடித்துள்ளனர்.

⊠⊠



## சிக்கல் தரும் ஹோமியோபதி

இங்கிலாந்தில் கிளாஷ்கோ நகரில் அமைந்திருந்த ஹோமியோபதி சிகிச்சை நிலையமொன்றை மூடிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இவ்வைத்தியசாலை - கிராமிய வைத்திய முறைகளின் மூலம் நோய்களை குணப்படுத்துவதில் பிரசித்தி பெற்றிருந்தது. ஹோமியோபதி சிகிச்சை முறையில் நோய் ஒன்றிற்கான காரணிகளை (Symptoms) உருவாக்கும் பதார்த்தங்களை, அந்நோயாளியின் உடலில் செலுத்துவதன்மூலம் அந்நோயைக் குணப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைகொண்ட மருந்துக்களுக்கு மாற்றான பதார்த்தங்களின் மூலமே நோய்கள் இந்த வைத்தியசாலையில் குணப்படுத்தப்படுகின்றன. இது சில சிக்கல்கலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்ற கருத்தும் நிலவிவருகிறது.

## உலகை அழிக்கும் பிளாஸ்ரிக்



பிளாஸ்ரிக் பொருட்கள் சமுத்திரங்களை மாசுபடுத்துவதாக விஞ்ஞான சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன் கண்ணுக்குப் புலப்படாத சிறிய தூளகளாக மணல், களிமண் ஆகியவற்றுடனும் இணைநது நிலப் பரப்பை மாசுபடுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை நீண்டகாலத்தின் பின் எவ்வாறான செயல்பாடுகளை உருவாக்கும் என்பது இதுவரை அறியப்படவில்லை. பிளாஸ்ரிக்கின் பல்வேறு வடிவங்களான நைலோன், பொலியெஸ்டர், அக்கிரிலிக் (Acrylic) ஆகியவற்றின் தாக்கங்கள் ஆராயப்பட்டன.

கடல் வாழ் உயிரினங்களின் உணவுத் தொகுதியில், பல தீய விளைவுகளை உருவாக்குவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன், இவை உணவுச் சங்கிலியில் (Food Chain) மாற்றங்களை உருவாக்கலாமெனவும் தெரிவித்துள்ளனர். இன்று உலகின் காணப்படும் பாவனைப் பொருட்கள் எல்லாம் பிளாஸ்ரிக்கினால் உருவாக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## தாவர பாதுகாப்பு

பிரித்தானியாவில் தாவர இனங்களைப் பாதுகாக்கும் அமைப்பொன்று அண்மையில் கணிப்பொன்றினை மேற்கொண்டிருந்தது. இந்தக் கணிப்பில் எந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் - எந்தவகையான பூக்களில் அதிக நாட்டம் காட்டுகின்றனர் என்பதை அறிவதற்கு முற்பட்டிருந்தது.





ஆயிரக் கணக்கான மக்கள் இந்தக் கணிப்பில் ஆர்வத்துடன் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

நவீன விவசாயப் பயிர்ச்செய்கை முறையினால், ஒவ்வொரு பிரதேசத்திலும் சிலவகை பூவினங்கள் அருகிச் செல்வதையும் காணநேர்ந்தது.

வாழ்விடங்கள் அழிந்துபோதலும், சூழல் மாசுபடுதலும் சில பூவினங்கள் முற்றாக அழிந்துபோவதற்கு வழிவகுத்திருந்தன. பொப்பிச் செடிகளின் பூக்கள் போரில் இறந்தவர்களை ஞாபகப்படுத்துவதற்கும், ரோஜாப்பூக்கள் நல்ல நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்கும் பாவிக்கப்படுகின்றன.

**செய்திக் கட்டுரை...** - அஸ்மிதா



# ஈராண்டு மக்கள் சேவையில்... தியாகி திலீபன் மருத்துவமனை

போராட்டம் நடைபெறுகின்ற அதே காலத்தில், மக்களுக்குரிய அன்றாட அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். தமிழ் மக்களுக்குரிய வைத்திய சேவைகள் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு முடக்கப்பட்டவேளையில், எமது தேசியத் தலைவரின் தூரநோக்கான சிந்தனையில் தமது மக்களுக்கு வைத்திய சேவையினை ஆற்றும் பொருட்டு, உண்ணாநோன்பிருந்து தனது உயிரைத் தியாகம் செய்த உத்தமன் லெப். கேணல் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவாக - தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் சுகாதார வசதிகள் மிகவும் பின் தங்கியுள்ள இடங்களில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினின் 10 மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு, அந்த மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றது.

மாங்குளம், ஐயன்குளம், ஆழியவளை, புங்குடுதீவு, அடம்பன், கற்சிலைமடு, பூநகரி, புளியங்குளம், நைனாமடு, அளம்பில். ஆகிய பின்தங்கிய 10 இடங்களிலேயே இந்த மருத்துவ சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் வடமராட்சி கிழக்கு - ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை நேற்று முன்தினம் (16-05-2004) தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

2002 ஆம் ஆண்டு சமாதானம் ஏற்பட்டு A-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் சுமார் 12 வருடங்களின் பின்னர் இடம்பெயர்ந்த மருதங்கேணிப் பிரதேச மக்கள் தமது சொந்த மண்ணில் மீளக்குடியேற ஆரம்பித்தனர்.

யாழ்.மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியாக விளங்கும் வடமராட்சி கிழக்குப் பகுதி நாகர் கோவில் இராணுவ முகாம் காரணமாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசமாக செம்பியன்பற்று தொடக்கம் சுண்டிக்குளம் வரை 10 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் படை படையாக மீளக்குடியேற ஆரம்பித்தனர்.

போக்குவரத்து வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் அற்ற இப்பிரதேசத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி, கேணல் சூசை, வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் தீபன், தமிழீழ அரசியல்துறையினர் ஆகியோரின் முயற்சியினால் 16-05-2002 அன்று ஆழியவளையில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை தனியார் வீடு ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக அந்தப் பிரதேச மக்களுக்கு அளப்பரிய சேவை ஆற்றிவருகின்றது.

இன்றைய இரண்டாவது ஆண்டு நிறைவு நினைவு நாளில் இம்மருத்துவ மனைக்கான புதிய கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. இப்புதிய கட்டடத்தை அமைப்பதற்கு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் உதவி செய்துள்ளன.

பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த இப்பிரதேச மக்கள் பல வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற ஆரம்பித்த வேளையில் யுத்தம் நடந்த அந்தப் பிரதேசத்தில் கொடிய நோய்த் தாக்கங்களுக்கு அந்த மக்கள் ஆளாகினர். மலேரியா மற்றும் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகிய மக்களை வரவேற்று மரண விளிம்பில் இருந்த அந்த மக்களை காப்பாற்றியது. இந்த தியாக தீபம் திலீபன் மருத்துவமனையே ஆகும்.

இந்தப் பிரதேசத்தில் முன்னர் இயங்கிவந்த மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை போரின் தாக்கங்களினால் சின்னா பின்னமாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இவ்வைத்தியசாலையை அந்த நேரம் உடனடியாக இயக்க முடியாமல் இருந்தது. அத்துடன் வைத்தியர்களும் அப்பிரதேசத்தில் வேலை செய்வதற்கு பின்னடித்ததாகவும் கூறப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் சவாலாக மக்களுக்கு முகம் கொடுத்து சுகாதார வசதிகளைச் செய்து வந்தது இந்த தியாக தீபம் திலீபன் மருத்துவமனையாகும். மேலும் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை இவ்வாண்டு தொடக்கம் தனியார் கட்டடமொன்றில் வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

இந்த மருத்துவமனையில் பணியாற்றி வரும் மருத்துவர்களும், ஊழியர்களினதும் சேவைகள் போற்றப்பட வேண்டியவை. மருத்துவப் போராளி செல்வி சுழவாணி இப்பிரதேச மக்களுடன் தானும் ஒருவராக ஒன்றுபட்டு இந்த மக்களின் குறைபாடுகளை நீக்கி வருகின்றார்.

இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி அல்லது சாவகச்சேரி பருத்தித்துறை போன்ற அரசினர் வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது. இதனால் வறிய மக்கள் போக்குவரத்துச் செலவாக அதிக பணத்தை செலவு செய்யவேண்டியுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு தியாக தீபம் அம்புலன்ஸ் வண்டி இந்த மக்களுக்கு கைகொடுத்து வருகின்றது.

இந்த வகையில் கடந்த இரண்டு வருடங்களாக ஆழியவளையில் இயங்கி வரும் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் சுமார் 25 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் வைரஸ் காய்ச்சலிற்கு 9934 பேரும் மலேரியா காய்ச்சலிற்கு 6131 பேரும சுவாசத் தொற்றுநோய்க்கு 7784 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேலும் இந்த மருத்துவமனையில் மூன்று தடவைகள் பற் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒரு தடவை வெளிநாட்டு நிபுணர்களை இரண்டு தடவைகள் திலீபன் மருத்துவ சேவையினராலும் மேற்கொளளப்பட்டது. இப்பிரதேச மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரிதும் பயன்பெற்றனர்.



மேலும் கேவில், மருதங்கேணி மாமுனை ஆகிய இடங்களில் நடமாடும் மருத்துவ சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. கேவில் கிராமத்தில் முதலுதவி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அதில் நாளாந்த சேவை நடைபெற்று வருகின்றது. இந்த மருத்துவ சேவையினரால் பாடசாலைகள், கிராமங்கள் மற்றும் முன்பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் நடைபெற்று பூச்சி மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (122)

---

**சமகால அரசியல் ஆய்வு** பகுதி - 4 - மு. திருநாவுக்கரசு



# முரண்பாடு என்பது எப்போதும் முற்றிவெடிக்கக் கூடிய ஒன்றே..

**9.5.2004 அன்று நாவலர் கலாசார மண்டபத்தில் மு. திருநாவுக்கரசு சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆற்றிய உரையிலிருந்து**

அவ்வாறெனில் கீழைத்தேச நாடுகளின் அரசியல் விடயங்களை நாம் ஆராயும் போது அவற்றுக்கென்று ஒரு வித்தியாசமான ஒரு நடைமுறை, அணுகுமுறை வகுத்திருக்கின்றது. இலங்கை விடயத்தில் அது அத்தியாவசியமானது.

ஆதலால், யாப்பினால் அரணமைக்கப்படுகின்ற எந்தவொரு பாதுகாப்பும் இலங்கை - இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் நிலைமைகளில் பாதுகாப்பாக முடியாது.

எனவே, யாப்புக்களைப் பற்றிய விடயத்தை அதனுடைய அரசியல் கலாசாரத்திற்குள்ளால பார்க்க வேண்டும். அங்கு காணப்படுகின்ற பத்திரிகாதர்மங்களுக்கூடாக பார்க்கவேண்டும். அந்த அடிப்படை அவைகள் எவ்வளவு தூரம் கட்டியெழுப்பப்பட்டால் அது நிலைக்கமுடியும் என்பதைக் காணவேண்டும்.அப்படிப் பார்க்காமல் நாங்கள் வெறும்மனே சட்ட நுணுக்கங்களானாலும், சட்டப் புத்தகங்களினாலும், சட்ட வியாக்கியதணங்களினாலும் எமது அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது. அப்படித்தான் எடுத்த முயற்சிகளெல்லாம் எப்பொழுதும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

இப்போது உலக ரீதியாக ஏற்பட்டிருக்கக் கூடிய யாப்பு பற்றிய அறிமுகங்களிலிருந்து ஆசிய நாடுகளில் யாப்பு நடைமுறையில் இருக்கின்ற அனுபவத்திற்குள் இறங்கி உலகின் புதிய அரசியல் கட்டங்கள் எங்கே எவ்வாறு உள்ளதென்பதற்கூடாக நாம் பிரச்சினைகளைப் பரிசீலிப்போம்.

இப்பொழுது நாம் பல மையங்களைத் தொடப்போகின்றோம். முதலாவது இலங்கை - இந்திய வெளியுறவுக் கொள்கை மையத்திலிருந்து நாம் பிரச்சினைகளை ஆராய்வோம். இதிலிருந்து கட்சி அரசியலுக்குள்ளாக வருவோம். இலங்கையின் அரசியல் பொருளாதார வளர்ச்சிக்குள்ளாகவும், இங்கிருக்கின்ற போராட்ட வளர்ச்சி விதிக் கூடாகவும் மிகவும் பரந்த முறையில் நாம் பிரச்சினையைப் பார்ப்போம்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் எப்பொழுதுமே இனம் சம்பந்தமான விடயத்தில் ஒரு விடயம் இதுவரை காலமும் மையம் கொண்டிருந்தது. அது எவ்வாறெனில், வெளிநாடுகளை இலங்கை அரசு தம் பக்கம் வளைத்து எடுப்பது அதன் மூலம் இனப்பிரச்சினையை கையாள்வது. பனிப்போர் அதற்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. எப்பொழுதும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தை தம்பக்கம் வைத்திருப்பது பனிப்போரில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவிற்கோ, சோவியத்திற்கோ அதன் சார்பு இந்தியாவிற்கோ லாபகரமானதாக இருந்தது.

எனவே, ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் இதன் பக்கம் வளைந்து செல்வதனால் லாபங்கள் அதிகமென்பதே உண்மை. இதனை இலங்கை அரசும் தெளிவாகப் பயன்படுத்தியது. இவ்வாறான ஒரு பெரும் போக்கு நிகழ்ந்து கொண்டே வந்தது. சுதந்திரக்கட்சி அரசு இந்தியாவை வளைக்கும். ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமெரிக்காவையும், பிரிட்டனையும் வளைக்கும். இந்த இருகட்சி அரசுகளும் மாறி மாறி இரண்டையும் வளைப்பார்கள்.

எப்பொழுதும் அவர்களுக்கு ஏதோ ஒன்றினுடைய வளைவு பதவியிலிருப்பவர்களுக்கு ஆதரவாகவே இருக்கும். இந்த வளைவுக் கூடாகத்தான் இலங்கை அரசியல் எப்பொழுதுமே கையாண்டார்கள். ஒரு கட்டத்தில் இது இறுக்கவைக்கும்.

இரண்டிற்கும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் டி.எஸ். சேனநாயக்காவும், சுதந்திரக் கட்சி சார்பில் பண்டாரநாயக்காவும் என இருவரும் பிரதான நபர்கள்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை செய்த காலத்தில் ஒரு பிரதானமான நிகழ்வு அரசியலில் ஒரு புதிய மாற்றம், கட்டம் அதில் தோன்றியது. அது எவ்வாறெனில் இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையில், இரு நாடுகளும் சுதந்திரமடைந்த காலந்தொட்டு முரண்பாடுகள் வளர்ந்து கொண்டு வந்தன. சீதாராமையா இலங்கையைப் பிடிக்க வேண்டுமென்று இந்தியாவில் அபிப்பிராயம் கொண்டிருந்தார். இந்தியத் தலைவர்களும், நிபுணர்களும் ஒருகாலத்தில் அவ்வாறே அபிப்பிராயம் கொண்டிருந்தனர். இவ்வாறே முரண்பாடு வளர்ந்து, வளர்ந்து வந்தது.

அவ்வாறு வளர்ந்து வந்த முரண்பாடு ஒரு கட்டத்தில் இனப்பிரச்சினையில் மையம் கொண்டது. இங்குதான் ஒரு துயரம் இருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினை எப்பொழுதும் எல்லாப் பிற்போக்கு வாதத்திற்கும் மையமாக இருப்பது என்பதுதான்.

அரசியலில் ஒன்று சொல்வார்கள் முரண்பாடுகள் முற்றி ஒரு கட்டத்தில் வெடிக்குமென்று உண்மைதான். மனிதனுக்கு எல்லைக்குட்பட்ட பாத்திரமிருக்கிறது. ஜே.ஆர். என்ன செய்தாரென்றால் முரண்பாடுகளின் வட்டட முட்டி, மோதி வெடிப்பதற்கிடையில் அதிலொரு உபவிதியை உருவாக்கி இரண்டாவது வட்டத்தைப் போட்டு விட்டார்.

இலங்கை - இந்திய முரண்பாடென்பது ஒரு மட்டத்தில் வெடிக்க வேண்டும். ஜே.ஆர். அதனை தமிழர் இந்திய முரண்பாடாக சட்ட அலகுமூலம் திருப்பியதால் அது இரண்டாவது வட்டத்திற்குள் சென்றது. எனவே முரண்பாடு வெடிக்க முடியவில்லை.

இன்னும் சொல்லக்கூடிய விடயமென்னவென்றால் இலங்கை - இந்திய முரண்பாடு திருப்பப்பட்டு இரண்டாவது வட்டத்திற்குள் தொட்டபோது தமிழர்களை ஒடுக்குவதாக அது மையம் கொண்டது.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையிலான போராட்டத்தில் தமிழர்கள் அதனுடைய களமாக்கப்பட்டார்கள். தமிழர்கள் மீது குண்டுகள் வெடித்தது. இது தமிழர்களை இரத்தம் சிந்த வைத்தது. வேண்டுமென்றால் தென்னிலங்கையின் நலன்களுக்காக நாங்களே இரத்தம் சிந்தினோம்.

இலங்கை - இந்திய முரண்பாட்டினுடைய அந்த இரத்த சோகையை நாங்கள் அனுபவித்தோம். அழகான திருப்பம் ஒன்று அரசியலில் ஏற்பட்டது. எனவே முரண்பாடுகள் என்பது எப்பொழுதும் முற்றி வெடிக்கக் கூடியது. ஒரு கட்டத்தில் மனிதனுக்கு மாத்திரம் இருக்கின்றதென்பதனால் வரலாற்றில் திருப்பக்கூடிய இடங்களில் திரும்பலாம். சாத்தியமான இடங்களில் திரும்பலாம். எல்லா இடங்களிலும் திரும்ப முடியாது. இரண்டாவது திருப்பத்தை போட்டு முரண்பாடு எங்கோ ஒரு கட்டத்திற்கு சென்றுவிட்டது.

இதனை நான் இவ்வாறு அழைக்கலாமென நினைக்கின்றேன். இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக்கு ஜே.ஆர்.அளித்துச் சென்ற முதுசம் அதுதான்.

இரண்டாவது கட்டத்திற்குபின் ஒரு வட்டம் தோன்றியது. அந்த வட்டத்திலிருந்துதான் இன்று லக்ஷ்மன் கதிகாமர் இந்தியா சென்று இலங்கை விடயத்தில் தலையிடுமாறு கோரியுள்ளார்.

எப்போதுமே இந்திய அரசியல் போக்கில் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகின்றது. இந்திய இலங்கை நட்பு இந்திய தமிழர் நட்பு இலங்கை இந்திய முரண்பாடு வேறு விதமாக மாறியுள்ளது.

இவற்றிற்கூடாக இலங்கையின் வெளியுறவுக் கொள்கை ஒரு புதிய கட்டத்திற்குவந்துள்ளது. அது மேற்கையும் கையாளும், இந்தியாவையும் கையாளும். இரண்டையும் கையாளக்கூடிய தகுதியை இலங்கை பெற்றுவிட்டது.

அதாவது, சந்திரிகாவின் கட்சி தேர்தலில் வெற்றிபெற்றதும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக சிசில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என அறிவித்துவிட்டார்.

இப்பொழுது இலங்கை சம்பந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கை விவகாரத்தில் உலகளாவிய வெளியுறவுக் கொள்கை எப்படி வந்துவிட்டதென்றால், எங்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமஷ்டி, சுயாட்சி அல்லது தனிநாடு, பிரிந்துசெல்லல் இது ஒரு கட்டம்.

இதுவரை காலமும் இலங்கை அரசு என்ன செய்ததென்றால் வெளிநாட்டு சக்திகளை நம்பியிருந்தது. தற்போது இந்த வட்டத்துக்குள் சுற்றுகின்றது.

இரண்டையும் கையாளும் தகுதியை ஜே. ஆரைத் தொடர்ந்து தற்போது இலங்கை அரசு பெற்றுள்ள வேளையில் இலங்கை தன்னைச் சுற்றி, வெளிநாடுகளைச் சுற்ற வைப்பதற்கு பதிலாக வெளிநாடுகளைச் சுற்றிதான் செல்கின்றது.

இதுதான் நான் காணக்கூடிய ஒரு புதிய வட்டம். எப்படியென்றால் இலங்கை ஒரு சுற்று வட்டத்துக்குள் தனித்து இருக்கமுடியாது. எனவே அது சுற்றித்தான் போகவேண்டியுள்ளது.

அந்தப் போக்கின்படிதான் தற்போது உலகின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்கின்ற நிலைமைகள் உருவாகியுள்ளன.

இப்படி ஒரு நிலைமை இல்லை என்றால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒரு போதும் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள். இது ஒன்று.

இரண்டாவது பிரச்சினை என்னவென்றால் இப்படி உருவாகியுள்ள இந்த அரசியல் சூழலுக்கு உள்நாட்டு அரசியல் எவ்வளவு தூரம் இடம் கொடுக்கின்றது, உள்நாட்டு அரசியல் எவ்வளவு தூரம் இருக்கப் போகின்றது.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

குற்றமே காக்கப் பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம் பகை.

திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகரிக்கும் குற்றச்செயல்கள் ஆபத்தை நோக்கி எதிர்காலம்...

யாழ்.குடாவில் குற்றவாளிகளும், குற்றச்செயல்களும் பீதியூட்டும் வகையில் அதிகரித்து வருவதை அண்மைக் கால சம்பவங்கள் பலவும் பகிரங்கமாகவே உணர்த்தி நிற்கின்றபோதிலும் குற்றவாளிகளைக் கைது செய்யவும், குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை சமூகப்பொறுப்புடன் தீவிரமான முறையில் அதற்குப் பொறுப்பானவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை என மக்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் அனைவருமே, சமூக விரோத செயல்களை ஒரு தொழிலாக - மூர்க்கத்தனமாக கைக்கொள்பவர்கள் தான் என்று முழுமையாகக் கூறிவிட முடியாது. இருந்தபோதிலும் மேற்கொள்ளப்படும் குற்றங்களை ஆழமாக நோக்குகையில் - அதன் தன்மைகளின் அடிப்படையில் பார்க்கும் போது அந்தக் குற்றங்களைப் புரிந்தவர்கள் அவற்றை ஒரு விதமான வெறித்தனத்துடன் சுயத்தன்மை இழந்த நிலையிலேயே மேற்கொண்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளமைதான் அதிர்ச்சியையூட்டும் விடயமாகும்.

குறிப்பாக, இந்த குற்றச்செயல்களைச் செய்பவர்கள் இளம் வயதினராக, அதுவும் 18 வயதுக்கும், 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைய தலைமுறையினராக இனங்காணப் பட்டுள்ளமைதான் கவலைதரும் விடயமாகும்.

- இவர்களுக்கு என்ன நடந்தது?

- ஏன் இப்படியான செயல்களில் மனதைத் தொலைத்து சமூகத்தில் குற்றவாளிகளாக தம்மைத் தாமே அகௌரவப் படுத்திக் கொள்கிறர்கள்?

அதுவும் இழப்பதற்கு எதுமே கிடையாது என்ற நிலையில் வெல்வதற்கு விடுதலையும் நாடும்மட்டுமே உள்ளது என்ற ஓர்மத்துடன் ஒரு வியத்தகு போரில், இரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் அளப்பரிய அர்ப்பணிப்புடனும், தியாகங்களுடனும், தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இனத்தின் இளையதலைமுறையினர் இப்படியான, சொந்தச் சகோதரர்களையே துன்பத்திலாழ்த்தும் வகையிலான, குற்றச் செயல்களை செய்பவர்களாக மாற அவர்களை உந்தித்தள்ளிய சூழல்தான் எது?

1995ஆம் ஆண்டின் அந்த இடம்பெயர்வு என்ற வரலாற்று அவலத்துக்குள் சிங்கள அரசு தமிழ் மக்களை தள்ளி, குடாநாட்டை விட்டு அவர்களை வன்னிப் பெருநிலப் பரப்புக்குள் வெளியேற்றும்வரை உலகிலேயே குற்றச் செயல்கள் அற்ற - போரின் அழுத்தங்களால் ஏற்படும் அச்சத்தை தவிர வேறு எந்தவிதமான பீதியுமற்ற அமைதிப் பிரதேசமாக யாழ். குடாநாடு விளங்கியது.

சமூகவிரோதிகளும், குற்றவாளிகளும் குடாநாட்டை விட்டு வெளியேறினர் அல்லது வெளியேற்றப்பட்டனர். இதனால், அர்த்தராத்திரியிலும் கூட ஒரு பெண் அச்சமின்றி நடமாடும் அமைதிநிலை அப்போது குடாநாட்டில் நிலவியது, சட்டம் ஒழுங்கை பேணுவோர் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உறுதியுடன் செயற்படுவோராகவும் அப்போது விளங்கினர்.

போர் மற்றும் பொருளாதாரத்தடை போன்ற கடுமையான சிங்கள அரசின் கெடுபிடிகளுக்கு மத்தியில், மின்தடை, எரிபொருள் தடை போன்றவற்றால் ஏற்பட்ட இருளிலும் கூட, பாதுகாப்பு குறித்த அச்சம் குடாநாட்டு மக்களுக்கு இருந்ததேயில்லை. ஆனால், இராணுவவலயமாகிவிட்ட குடாநாட்டில் 1996 ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட சமூக கலாசார மாற்றங்கள் மிகக் குறுகியதான ஏழாண்டு காலப் பகுதிக்குள் எத்தகைய சீரழிவு நிலையை குடாநாட்டில் ஏற்படுத்திவிட்டது.

மாலை 7 மணிக்குப் பின் தெருவில் நடமாட அச்சப்படும் நிலையில் மக்கள் வீடுகளுக்குள் ஆமைபோல் ஒடுங்கி விடுகிறார்கள். வீதியில் இளம் பெண்கள் - மாணவிகள்... சுயாதீனமாக நடமாட முடியாத அளவுக்கு இளைஞர்களின் கேலிகள், கிண்டல்கள், ஆசை வர்ணனைகள் மற்றும் பாலியல் ரீதியிலான அவமதித்தல்கள் அதிகரித்துவிட்டன. முதியவர்களும், முதுமையும் இளைஞர்களின் மரியாதையற்ற செயல்களால் கூனிக் குறுகிப் போகின்றது.....

தனிமனிதர்களின் சிறு பிரச்சினைகள் கூட குழு மோதலாக இரத்தக் களறிக்கு வித்திடும் நிலை பரவலாகிவிட்டும்.

வீதிகளில் போதையில் திரியும் விடலைப் பருவத்தினரால் ஏற்படுத்தப்படும் விபரீதங்கள் எல்லைமீறிய அபாயங்களை தோற்றுவிக்கும் காரணிகளாகிவிட்டது. குடும்ப உறவுகள் கூட சந்தியில் பேசப்படும் சமாச்சாரங்களாகிவிட்டன.

வீதிக்கு வீதி சட்டபூர்வமானதும், சட்டபூர்வமற்றதுமான மதுபான நிலையங்களும் மினிசினிமா அரங்குகளும் பண்பாடு சீரழிவுக்கு வழிகாட்டும் மையங்களாகி விட்டன.

தென்னிந்திய மூன்றாம்தர சினிமாக்களின் கட்டுப்பாடற்ற வருகையும், இருபத்து நான்கு மணிநேர தொலைக்காட்சி சேவைகளின் உளவியல் ரீதியான ஊடுருவல்களும் இளைஞர்களின் மனங்களில் ஏற்படுத்தும் பாதிப்பு அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில் சமூகச் சீரழிவுகள் ஒருபக்கம், கலாசாரச் சீரழிவுகள் இன்னொரு பக்கம், சமூக விரோதிகளை அதிகளவில் உற்பத்தி செய்து ஊக்குவிக்கும் காரணிகளாகி விட்டநிலையில் குற்றச்செயல்களும் குற்றவாளிகளும் அதிகரிப்பதானது குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாகி விட்டுள்ளமையை கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த நிலை தொடருமானால் ஆபத்து தமிழர் தம் தாயக மண்ணுக்கும், அதன் மக்களுக்கும்தான்.

அரசாங்கம் இவற்றிலெல்லாம் அக்கறை செலுத்தும் என்ற நம்பிக்கை மக்களிடம் அறவே அற்றுப் போய்விட்டது.

மக்கள் சமூகப் பொறுப்புள்ள இன உணர்வாளர்களும் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுதான். இல்லையேல் நாம் நம்மையும் நம்மண்ணையும் அழிப்போர்க்கு உதவியவர்களாகிவிடுவோம்.

# நாடும் நடப்பும்




# இந்திய மீனவர்களுடனான சந்திப்பு 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறும்

எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இலங்கையின் வடபகுதி கடற்பரப்பினுள் ஊடுருவும் இந்திய மீனவர்களால் உருவாகும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயவே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பை 'கியூடெக்' நிறுவனம் ஒழுங்கு படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 25 ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் பி.அருளானந்தம் நாகபட்டிணம், ஜெகதாப்பட்டிணம் உள்ளிட்ட தமிழ் நாட்டின் கடற்கரை மாவட்டங்களைச் சேர்ந்த 22 மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் 26 ஆம்திகதி மன்னாருக்கு விஜயம் மேற்கொள்ளும் அதேவேளை 27 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் யாழ்மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் கலந்துகொள்வார்கள்.

யாழிலிருந்து செல்லும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாக யாழ்.மாவட்ட கியூடெக் இணைப்பாளர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் அடிகளார் செல்லவுள்ளார்.

மீனவர்களிடையே தோன்றியுள்ள பகை உணர்வைத் தவிர்த்தல் மற்றும் யாழ்.குடாநாட்டுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்தாலோசனை நடத்தவுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தரும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்வரும் 1 ஆம் திகதி நாடுதிரும்புவர் எனவும் அவர்கள் நாடுதிரும்புமுன்னர் நீர்கொழும்பிற்கும் சென்று அங்குள்ள மீனவர்களுடனும் பேச்சுக்களை நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் நேற்று யாழ்.நகரில் பேரணி!

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.நகரில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை சுழிபுரம் சந்திப்பகுதியில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் பலியானதை அடுத்து, அந்த பஸ் எரிக்கப்பட்டதைக் கண்டித்தே இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் நடத்துனர்கள் என ஆயிரக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்.நகரப்பகுதியிலிருந்து ஆரம்பமான இந்தப்பேரணி கண்டி வீதியூடாக யாழ்.செயலகத்தை அடைந்தது.

யாழ்.செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் எஸ்.சுந்தரம் பிள்ளையிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் பொ.கெங்காதரன் கையளித்தார். தொடர்ந்து பேரணி கலைந்து சென்றது. (ப)

### யுனிசெவ் அனுசரணையுடன்

## பதினைந்து பாடசாலைகளில் எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்பு

மெல்லக் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி யாழ். மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் 15 பாடசாலைகளில் எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இந்த வகையிலே தென்மராட்சிக் கல்வி வலயத்தில் மூன்று பாடசாலைகளில் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியனவே தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளாகும். (122)

### கிளிநொச்சியில்

## கிராமிய வங்கிச் செயற்பாடுகள் இம் மாதம் முதல் கணினி மயம்

கிளிநொச்சி கிராமிய வங்கியின் வங்கிச் செயற்பாடுகள் இந்த மாதம் முதல் கணினி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் முதன்முதலாக கிளிநொச்சி கிராமிய வங்கிக் கிளையே கணினிச் செயற்பாட்டின்மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிளிநொச்சி கிராமிய வங்கிக் கிளையில் 8300 நிரந்த சேமிப்பு வைப்புக் கணக்குகளும், 3600 சிறுவர் சேமிப்புக் கணக்குகளும், 785 முதலீட்டு சேமிப்புக் கணக்குகளும் செயற்படுத்தப்பட்டு வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

### வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல்

## ஏ9 பாதையை இரவு பகலாக திறந்துவிடுமாறு கோரிக்கை!

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் விழாவையொட்டி எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் இரவு பகலாக ஏ-9 பாதையைத் திறந்து உதவுமாறு கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபையினர் முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் கண்ணகி அம்மன் கோவில் பொங்கல் விழா இந்த முறையும் சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளும் வகையில் கடந்த 16 ஆம் திகதி ஆலய மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடத்தபபட்டது. இந்தக் கூட்டத்திலேயே அரசாங்க அதிபருக்கு மேற்படி கோரிக்கை விடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் மற்றும் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மின்சாரம், போக்குவரத்து, வீதிப் புனரமைப்பு, வியாபாரிகள் கடை அமைப்பதற்கான விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதோடு முக்கியமாக ஆலயச் சூழலில் மின்சார விநியோகம் எவ்வாறு வழங்குவதெனவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தினக்குரல் படப்பிடிப்பாளர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

யாழ். தினக்குரல் பத்திரிகையின் படப்பிடிப்பாளரான எஸ்.சிவபாலன் என்பவரே காடைத்தனமாகக் தாக்கப்பட்டு பற்றைக்குள் தூக்கிவீசப்பட்டவராவார்.

கல்வியங்காட்டுப் பகுதியில் இறந்த ஒருவரின் உடல் கிடப்பதாக வந்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பையடுத்து அந்த இடத்திற்குச் சென்றபோதே, இனந்தெரியாத நபர்களால் முகத்தில் தாக்கப்பட்டுப் பின்னர் அவர் அணிந்திருந்த சேட்டைக் கழற்றி கண்களைக் கட்டித் தாக்கிவிட்டு பற்றைக்குள் தூக்கி வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

தாக்கியவர்கள் சிங்கள மொழி பேசியதுடன், கொச்சைத் தமிழிலும் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை – 2004
# பொதுச் சாதாரணப் பரீட்சை – COMMON GENERAL TEST

P. உமாசங்கர், விரிவுரையாளர்.
இலங்கை தொழில்நுட்பக்கல்லூரி,
கொழும்பு.

P. கமல்தாசன்,
யா/இந்துமகளிர் கல்லூரி

## மாதிரிக் கட்டமைப்பு வினாத்தாள் 12/T

மேற்படி பரீட்சைக்கென எம்மால் அண்மையில் வெளியிடப்பட்ட (ஒன்பதாம் பதிப்பு 2004-ஏப்ரல்) பொதுச்சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூறுக்கு மேதிகமாக பின்வரும் அண்மைக்கால விடயங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன. இந்த அனைத்து விடயங் களையும் ஒருங்கிணைத்து கற்பதன் மூலம் 21-05-2004 அன்று நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சையில் விசேட சித்தி பெற எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

V கணிதரீதியான வினாக்கள்

உ+ம்:

1. ஒரு பொதுத் தேர்தலில் பங்குபற்றிய மக்கள் குழு ஒன்றில் 60% ஆனோர் R இற்கு வாக்களிப்பதாகக் கூறினர். R இற்கு வாக்களிப்பதாகக் கூறியவர்களில் 90 % ஆனோர் உண்மையில் R இற்கு வாக்களித்தனர். R இற்கு வாக்களிப்பதாகக் கூறாதவர்களில் 5 % மானோர் உண்மையில் R இற்கு வாக்களித்தனர். R இற்கு வாக்களித்தோரின் சதவீதம் யாது?
1) 52% 2) 53% 3) 54% 4) 55% 5) 56%

B கூற்றுக்களை அடிப்படையாகக் கொணட வினாக்கள் 26-30 வரையான வினாக்கள்

I கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்ட வினாக்கள்

உ+ம்:

❖ இவ்வினாக்கள் ஒவ்வொன்றிலும் x, y என்னும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைத் தெரிந்தெடுக்க

* x, y ஆகிய இரண்டும் உண்மையாகவும் y ஆனது x இன் சரியான விளக்கமாகவும் இருப்பின் A யையும்
* x, y ஆகிய இரண்டும் உண்மையாகவும் y ஆனது x இன் சரியான விளக்கமாக அமையாமலும் இருப்பின் B யையும்
* x உண்மையாகவும் y உண்மையாகவும் இருப்பின் C யையும்
* x உண்மையாக அமையாமலும் y உண்மையாகவும் இருப்பின் D யையும்
* x, y ஆகிய இரண்டும் உண்மையாக அமையாமல் இருப்பின் E யையும் தெரிவு செய்க

1. x: சுற்றாடல் அசுத்தமான வாயுக்களால் மாசுபடுத்தப்படுகின்றது.
y: அசுத்தமான வாயுக்கள் அதிகளவு நச்சு வாயுக்களைக் கொண்டிருக்கின்றது.
1) A 2) B 3) C 4) D 5) E

II கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணும் வினாக்கள்

உ+ம்:

❖ இவ்வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரச்சினையும் x, y எனும் இரு கூற்றுக்களும் தரப்பட்டுள்ளன. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப உமது விடையைத் தெரிவு செய்க.

* தீர்வைக் காண்பதற்கு கூற்று x மாத்திரம் போதியதெனில் Aயையும்
* தீர்வைக் காண்பதற்கு கூற்று y மாத்திரம் போதியதெனில் Bயையும்
* தீர்வைக் காண்பதற்கு கூற்று x அல்லது y போதியதெனில் Cயையும்
* தீர்வைக் காண்பதற்கு கூற்று x கூற்று y ஆகியன அவசியமெனின் Dயையும்
* தீர்வைக் காண்பதற்கு கூற்று x கூற்று y ஆகியவற்றிலுள்ள தகவல்கள் போதியனவல்லனவெனின் E யையும் தெரிவு செய்க

1. விமல், ராஜ் ஆகியோருக்கிடையே எவர் உயரமானவர்?
x: விமல் ரஜீவனை விட உயரமானவர், கமலனைவிட குட்டையானவர்
y: ராஜ் ரஜீவனை விட உயரமானவர், ஆனால் கமலனைவிட குட்டையானவர்
1) A 2) B 3) C 4) D 5) E

C பந்தியின் ஊட்கிடை கருத்துக்கள், ஒழுங்கமைப்பு, கோலங்கள் 31 - 35 வரையானவை

I பந்தியின் உட்கிடை கருத்துக்கள்

உ+ம்:

❖ எமக்கு வயது செல்லச்செல்ல நாம் குறைந்த அளவில் நித்திரை செய்ய விரும்பவேண்டும். ஏனெனில் உமது உயர்தரமான அறிவையும் ஆற்றல்களையும் பயன்படுத்தும் போது அவை பெரும்பாலும் மகிழ்வுடன் அனுபவிக்கத்தக்கதாக இருக்கும். ஆகவே எமது மனத்தைச் செயலற்றதாக்கும் நித்திரை நேரத்தை வீணாக்கும்.

1. பின்வருவனவற்றில் எது மேற்குறித்த பந்திக்கு அடிப்படையாய் அமைந்த எடுகோளாகும்.
1) குறைந்தளவு நித்திரை விரும்பத்தக்கதன்று
2) நித்தரை அறிவையும் ஆற்றல்களையும் மேம்படுத்துகின்றது.
3) மனத்தின் செயலற்ற தன்மை விழிப்புடன் ஒன்றுபடுகின்றது.
4) அறிவும் ஆற்றல்களும் வயதுடன் இயற்கையாக மேம்படுகின்றன.
5) நித்திரை வயது குறைந்தவர்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

2) பின்வரும் கூற்றுக்களில் எது ஆசிரியரின் வாதத்தைப் பலப்படுத்தும்
1) உயர்தரமான அறிவு ஆக்கபூர்வமான கனவுகளில் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படுகின்றது.
2) நித்திரையின் போது மனம் பெரும்பாலும் செயற்திறனுள்ளதாக இருக்கும்
3) நித்திரை ஒரு நுண்ணறிவு தூண்டி ஆகுமெனச் சில கற்கைகள் முடிவு செய்துள்ளன.
4) விழிப்பு அனுபவங்களை மேலும் நுண்ணறிவுடன் எங்ஙனம் பயன்படுத்தலாமெனக் கனவுகள் எமக்கு அறிவுறுத்துகின்றன.
5) உயர்தரமான ஆற்றல்கள் மனதுடன் சம்பந்தப்பட்டவை அல்ல.

II வரிசை ஒழுங்கமைப்பு

உ+ம்:

❖ A, B, C, D, E, F, G என்ற ஏழு நண்பர்கள் விருந்து நிகழ்ச்சி ஒன்றின் போது ஒருமிக்க அமர்ந்திருக்கச் செய்தல் வேண்டும். அவர்கள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டும் முன்னாலிருந்து பின்னோக்கி 1 தொடக்கம் 7 வரைக்கும் தொடர்ச்சியாக இலக்கமிட்டும் உள்ள ஏழு கதிரைகளில் அமர்ந்திருத்தல் வேண்டும். அமரும் ஒழுங்குகள் பின்வரும் விதிகளுடன் இணங்குதல் வேண்டும்.

* F இன் கதிரைக்கு உடனடியாகப் பின்னால் இருக்கும் கதிரையில் A அமருதல் வேண்டும்.
* E கதிரைக்கு உடனடியாக் முன்னால் இருக்கும் கதிரையிலும் E இன் கதிரைக்கு உடனடியாகப் பின்னால் இருக்கும் கதிரையில் B அமரமுடியாது
* C இன் கதிரைக்கும் G இன் கதிரைக்கும் இடையே செப்பமாக இரு கதிரைகள் இருத்தல் வேண்டும்.
* D இன் கதிரைக்கும் G இன் கதிரைக்கும் இடையே குறைந்த பட்சம் ஒரு கதிரையேனும் இருத்தல் வேண்டும்
* கதிரை 3 இல் E அமருதல் வேண்டும்.

1. கதிரை 1 தொடக்கம் கதிரை 7 வரைக்குள்ள பின்வரும் அமர்வு ஒழுங்குகளில் எது விதிகளுடன் இணங்குகின்றது?
1) A,D,E,G,B,F,C 2) B,G,E,D,C,F,A 3) D,B,E,G,F,A,C 4) D,C,E,G,F,A,B 5) F,A,C,E,D,,G,B
( வட்டவடிவிலான ஒழுங்கமைப்பு வினாக்களும் இடம்பெறலாம்)

III கோலங்கள்

உ+ம்:

❖ குற்றுக்களின் தொடர்ச்சியான ஒழுங்குகள் குறித்த ஓர் கோலத்திற்கேற்ப ஏற்படுத்தப்பட்டுள்ளன. உருவிற்கு ஏற்ப முதலாம் ஒழுங்கிற்குப் பின்னர் ஒவ்வோர் ஒழுங்கும் முந்திய ஒழுங்கின் கோலத்திற்கும் ஒரு நிரைக் குற்றுக்கள் சேர்ப்பதன் மூலம் பிறப்பிக்கப்படுகின்றது.



இக்கோலம் தொடருமெனின் பின்வருவனவற்றில் எது ஆறாம் ஒழுங்கில் உள்ள குற்றுக்களின் எண்ணிக்கையைத் தருகிறது?
1) 24 2) 28 3) 32 4) 36 5) 40

D சதுரமுகி தகவல் ஒழுங்கமைத்து முடிவுகளை பெறல் என்பவற்றுடன் தொடர்புடைய வினாக்கள் 35 - 40 வரையான வினாக்கள்

I சதுரமுகியுடன் தொடர்புடைய வினாக்கள்

உ+ம்:

❖ கீழ்வரும் வினா அருகே காட்டப்பட்டுள்ள 27 சிறிய சதுரமுகியை அடிப்படையாகக் கொண்டது பெரிய சதுரமுகியின் ஒவ்வொரு முகமும் 9 சிறிய சதுரங்களால் ஆனவை. மூன்று முகங்களுக்கு நிறந்தீட்டப்பட்ட முறை இங்கு க்காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவில் காட்டப்படாத மூன்று முகங்களில் நிறந்தீட்டப்பட்டுள்ளவை இங்கு காட்டப்பட்டுள்ள சதுரங்களுக்கு எதிராக உள்ள சதுரங்களாகும்.

1. சதுரமுகியின் ஆறுமுகங்களிலும் நிறந்தீட்டப்பட்ட சிறிய சதுரங்கள் எத்தனை?
1) 15 2) 18 3) 21 4) 24 5) 27



II தகவல் ஒழுங்கமைத்து விடைகளைப் பெறல்

உ+ம்:

❖ பின்வரும் வினாக்கள் பரீட்சை ஒன்றில் ABCDEFG என்ற ஏழு பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகள் பற்றிய பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

* G இன் புள்ளிகள் F பெற்ற புள்ளிகளின் இருமடங்காகும்.
* D இன் புள்ளிகள் ஏனைய பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளிலும் பார்க்க குறைந்தனவாகும்.
* A இன் புள்ளிகளும் C இன் புள்ளிகளும் சமம்
* B இன் புள்ளிகள் F இன் புள்ளிகளினதும் G இன் புள்ளிகளினதும் மொத்தத்திற்குச் சமம்
* E இன் புள்ளிகள் BCG ஆகியோரின் புள்ளிகளின் மொத்தத்திற்குச் சமம்
* A இன் புள்ளிகள் B இன் புள்ளிகளினதும் G இன் புள்ளிகளினதும் மொத்தத்திற்குச் சமம்.

1. பரீட்சார்த்திகளில் எவர் இக்குழுவில் அதியுயர் புள்ளிகளைப் பெற்றார்?
1) A 2) B 3) C 4) E 5) F

2. எம்மூன்று பரீட்சார்த்திகளின் மொத்தம் E பெற்ற புள்ளிகளுக்குச் சமம்?
1) ACG 2) CGF 3) ABG 4) GFD 5) BGF

E தகவல் அடிப்படையில் விடைகாணல், எண்கோலங்கள், வட்டவரைபுகள் 41 - 45 வரையான வினாக்கள்

I தகவலடிப்படையில் விடை காணல்

பின்வரும் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்

உருவில் இருக்கும் A தொடக்கம் G வரை பெயரிடப்பட்டுள்ள ஏழு குற்றிகள் ஒவ்வொன்றினாலும் வெவ்வேறு நிறத்தில் மை பூசவேண்டியுள்ளது. நிறங்கள் சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு, செவ்வூதா, கபிலம் என்பனவாகும்.

* சிவப்பு மஞ்சளுக்கு மேலே இருத்தல் வேண்டும்.
* மஞ்சள் பச்சைக்கு மேலே இருத்தல் வேண்டும்
* பச்சை வெள்ளைக்கு மேலே இருத்தல் வேண்டும்

| | |
|---|---|
| A | |
| B | |
| C | |
| D | |
| E | |
| F | |
| G | |

1. EF ஆகிய குற்றிகளில் முறையே பச்சை, கறுப்புநிற மை பூசப்பட்டிருப்பின் பின்வருவனவற்றில் எது திருத்தமானது?
1) குற்றி B இல் அல்லது குற்றி C இல் சிவப்பு நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
2) குற்றி D இல் அல்லது குற்றி G இல் மஞ்சள் நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
3) குற்றி D இல் அல்லது குற்றி G இல் கபில நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
4) குற்றி A இல் அல்லது குற்றி G இல் செவ்வூதா நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
5) குற்றி C இல் அல்லது குற்றி F இல் வெள்ளை நிறம் பூசப்பட்டிருக்கலாம்.

II எண்கோலங்கள்

1. x,y ஆகிய வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ள கோலங்களை அவதானித்து z வரிப்படத்தில் ? குறியிட்ட வெற்றிடத்திற்குப் பொருத்தமான இலக்கத்தை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க




1) 10 2) 14 3) 7 4) 13 5) 27

III வட்டவரைபுகள்

உ+ம்:

❖ பின்வரும் வினாக்கள் பின்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டவை. 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பாடம் X இற்குத் தோற்றிய இரு மாணவர்களின் குழுக்களின் புள்ளி வீச்சுக்களின் பரம்பல் வருமாறு




2002 ஆம் ஆண்டு




2003 ஆம் ஆண்டு

1. எப்புள்ளி வீச்சு இரு கூட்டங்களுக்குமிடையே சதவீதங்களில் அதியுயர் வித்தியாசத்தைக் காட்டுகின்றது?
1) 75- 100 2) 61- 74 3) 50- 60 4) 40- 49 5) 30- 39

2. 2002, 2003 ஆகிய இரு ஆண்டுகளிலும் 40 அல்லது 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் சதவீதங்களின் வித்தியாசம் யாது?
1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

( தனி வட்டவரைபை அடிப்படையாகக் கொண்ட வினாக்களும் இடம்பெறலாம்.)

தொடரும்....

# ஈராக்கின் ஆளும் சபை தலைவர் கார்க் குண்டுத் தாக்குதலில் பலி!



ஈராக்கில், அமெரிக்க அரசினால் நியமிக்கப்பட்டிருந்த ஆளும் சபையின் தலைவர் இசதீன் சலீம் கார்க் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளார். அமெரிக்கக் கூட்டுப் படையின் தலைமையகத்தின் முன் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தலைமையகத்திற்கு செல்வதற்காக சலீம் காத்திருந்த வேளையிலேயே இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

சலீமுடன் பிரயாணம் மேற்கொண்ட பலர் கொல்லப்பட்டுள்ளனர். சலீம் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்தான் கொல்லப்பட்டாரா என்பது தொடர்பான இதுவரை அறியப்படவில்லையென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதல் நடைபெற்ற பிரதேசம் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டிருந்தது. கொல்லப்பட்ட சலீம் ஷியா முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு எழுத்தாளரும், தத்துவஞானியும், அரசியலில் தீவிர செயற்பாட்டாளர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த யூலை மாதம் ஈராக்கில் ஆளும் சபை உருவாக்கப்பட்ட பின் கொல்லப்பட்ட இரண்டாவது நபர் இவராவார். சலீமின் கொலை தொடர்பாக சர்வதேச நாடுகளினரால் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சலீமைக் கொன்றவர் ஈராக்கிய மக்களின் எதிரிகள் என பிரித்தானிய வெளிநாட்டு செயலர் ஜக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஈராக்கின் தென் பகுதியில் ஷியா முஸ்லிம் ஆதரவாளர்களுக்கும், இத்தாலிய படையினருக்கும் இடையே பலமான மோதல்கள் நடைபெற்று வருகின்றன. நசிரியாவில் இத்தாலிய படையினருடன் ஏற்பட்ட மோதலில் 9 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மோதல்களை அடுத்து இத்தாலிய படையினர் நசிரியாவிலுள்ள தமது பிரதான முகாமை 6 மைல்கள் பின்நோக்கி நகர்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்தாலிய படையினர் ஒருவர் இந்தத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே புனித நகர் கர்பலாவில், அமெரிக்க படையினருக்கும் சதாம் ஆதரவுப் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 5 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டும் 30 பேர் வரை காயமடைந்துமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்கொரியாவிலுள்ள ஒருதொகுதி அமெரிக்கப் படையினரை ஈராக்கிற்கு அனுப்ப முடிவு!



தென்கொரியாவில் பணிபுரியும் அமெரிக்கப் படையினரின் ஒரு தொகுதியினரை ஈராக்கிற்கு அனுப்புவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தென்கொரிய அரசு தெரிவித்துள்ளது. இரு நாடுகளும் அமெரிக்கப் படையினரை ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடகொரிய எல்லையில் கடமை புரியும் 4000 படையினரை ஈராக்கிற்கு அனுப்புவதற்கே அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. ஈராக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அமெரிக்கா முன்னர் திட்டமிட்டிருந்தது. ஆனால், ஈராக்கில் அதிகரித்துவரும் வன்முறைகளினால், படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனிடையே 50 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த கொடிய போரின்பின், தென்கொரிய நாட்டின் எல்லைப் பாதுகாப்புக்கென 37000 அமெரிக்கப் படையினர் கடமையாற்றிவருகின்றனர். 4000 படையினரை வெளியேற்றுவது தென்கொரியாவின் பாதுகாப்பை பலவீனப்படுத்தலாமென பி.பி.சியின் சால்ஷ் ஸ்கன் லொன் தெரிவித்தார்.

தென்கொரியா ஈராக்கிற்கு 3000 படையினரை அனுப்புவதற்கு முன்னர் சம்மதம் தெரிவித்திருந்தது. ஆனால், உள்நாட்டில் அதிகரித்து வரும் பிரச்சினைகளால், ஈராக்கற்கு படைகளை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.




## பிளேயரின் விஜயத்தின் முன் துருக்கியில் குண்டுவெடிப்பு!



பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் நேற்று துருக்கிக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் துருக்கியில் நான்கு சிறிய குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. துருக்கிய நகரான அங்காராவில் பிரித்தானிய வங்கிக் கிளை ஒன்றிற்கு வெளியே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் அதிக சேதம் ஏற்படவில்லை எனவும் மக்களுக்கு காயம் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொனி பிளேயர் தனது விஜயத்தின் போது, பிரதமர் ஜனாதிபதி ஆகியோருடன் துருக்கியை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்தவராக ஏற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்வதற்காகவே துருக்கிக்கு விஜயம் மேற்கொள்ள விருந்தார்.

அத்துடன் ஈராக்கில் தொடரும் போர் பயங்கரவாதம் சைப்பிரசின் பிரச்சினைகள் தொடர்பாகவும் துருக்கியப் பிரதமர் எர்டோகனுடன் பேச்சு மேற்கொள்ளவும் பிளேயர் திட்டமிட்டிருந்தார். ஐரோப்பிய ஒன்றியத்தில் துருக்கியை இணைத்துக்கொள்வதற்கு பிரித்தானியா முயர்சிகள் மேற்கொண்டு வருகிறது.

## பர்மிய புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் பேச்சுக்கள் ஆரம்பம்

பர்மாவில் புதிய அரசியல் யாப்பினை உருவாக்குதற்கான பேச்சுவார்த்தைகளை அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர்கள் ஆரம்பித்துள்ளனர். இப்பேச்சுக்களில் பங்குகொள்வதற்கு பர்மாவின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகத்துக்கான தேசிய ஒன்றியம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இக்கட்சியின் தலைவி ஆங் சாங் சூகி தொடர்ந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பான பேச்சுக்கள் பர்மாவில் ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான ஒரு சரித்திர நிகழ்வென ஆளும் யுன்ரா தெரிவித்துள்ளது. ஆனால், இது நம்பகத்தன்மை அற்றதென செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். பர்மாவில் சில சிறுபான்மை இனங்களும் புதிய அரசியல் யாப்புக்கான பேச்சுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

மேலும், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பர்மாவில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்டனம் தெரிவித்து வருகின்றன. மேலும், எதிர்க்கட்சி தலைவி ஆங் சாங் சூகி பர்மாவில் ஜனநாயகத்தை மீண்டும் உருவாக்குதவற்கு முக்கியமானவர் என கருதப்படுகின்றார்.ஆனால் பர்மிய அரசு அவரை முக்கயமானவர் எனக் கருதவில்லை.



## அமெரிக்க மசசு செட்ஸ் மாநிலத்தில் ஒரு பாலுறவுத் திருமணத்திற்கு அனுமதி




அமெரிக்காவின் மசசு செட்ஸ் மாநிலம் ஒரு பாலுறவுத் திருமணத்திற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இந்த அனுமதியை அடுத்து ஓரினச்சேர்க்கையாளர்கள் கேம்பிறிஜ் நகரில் மிகுந்த ஆரவாரத்துடன் இதனைக் கொண்டாடினர். கொன்ச வேட்டிவ் குழுக்களினால், இவ் வகையான திருமணங்களை தடை செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் உயர் நீதிமன்றத்தினால், ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஓரின திருமணங்களுக்கு அங்கீகாரம் சட்ட மூலமாக்கப்பட்டதும் கேம்பிறிஜ்ஜில் அமைந்துள்ள நகர மண்டபத்தில் பெருமளவான ஓரின சேர்க்கையாளர்கள் திரண்டு கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் திருமணம் தொடர்பான விண்ணப்பங்களை நிரப்புவதற்காக குழுமியிருந்தனர். இவ்வகையான முதலாவது திருமணம் நேற்று நடைபெற இருந்தது.

மசசு செட்ஸ் மாநிலத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு திருமண அனுமதி வழங்கப்பட்டுள்ளமை அமெரிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நேரத்தில் இப்பிரச்சினையும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இதனால், அமெரிக்க ஜனாதிபதி புஷ் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும் எனவும் இதன் மூலம் ஆணும் பெண்ணும் இணைந்துகொள்வதே திருமணம் என்பது வரையறுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

## தடுப்பு மருந்து வழங்கத் திட்டம்

எயிட்ஸ் எனப்படும் பாலியல் நோய்க்கான தடுப்பு மருந்துகளை உலகின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தை துரிதப்படுத்தவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக, சிறந்த மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்காவின் சுகாதார செயலாளர் ரொனி தொம்சன் தெரிவித்தார். புதியதிட்டத்தின் மூலம் இவ்வகையான மருந்துகள் தேவைப்படுபவர்களுக்கு உடன் அந்த மக்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்திருந்தார்.

## தாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் இஸ்ரேலியப் படையினர் மீளவும் காஸாப் பிரதேசத்திற்குள் புகுந்தனர்

இஸ்ரேலிய தாங்கிகளும் கவச வாகனங்களும் ஹெலிகொப்ரரின் உதவியுடன் காஸா பிரதேசத்திற்குள் பிரவேசித்துள்ளதாக இஸ்ரேலியப் படையினரும் பலஸ்தீனியர்களும் தெரிவித்துள்ளனர்.

எகிப்திய எல்லையில் அமைந்துள்ள ரபாவை இராணுவ வாகன அணி நெருங்கிய வேளையில் இஸ்ரேலியர்களின் தாங்கி ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தை ஆரம்பித்து அந்தப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவே இந்தப் போர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய வானொலி அறிவித்துள்ளது. பலஸ்தீன தீவிரவாதிகள் எகிப்திலிருந்து சுரங்கப் பாதையினுடாக ஆயுதங்களை காஸாப் பிரதேசத்திற்குள் கடத்தி செல்வதை. தடுப்பதற்காகவும் இப்போர் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதனிடையே மூன்றாவது நாளும் நேற்று காஸாவில் கட்டடங்கள் மீது ஹெலிகொப்ரர் தாக்குதலை நடத்தி வருகின்றன. அண்மையில் இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் இஸ்ரேலியர்களின் குடியிருப்புக்களை அழிப்பதற்கான உத்தரவுகளை வழங்கியிருந்தது. இது தொடர்பாக படைத் தளபதியான மோசியா லொண் இஸ்ரேலிய சட்டமன்றத்தில் தெரிவிக்கும்போது, பல நூற்றுக்கணக்கான வீடுகள் எகிப்திய காஸா எல்லைப் பிரதேசத்தில் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார். இதுவரை 80 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் 1100 பலஸ்தீனர்கள் தமது வீடுகளை இழந்துள்ளார்கள் என ஐக்கிய நாடுகளின் நிவாரணப் பணிகளுக்கான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



பலஸ்தீனர்களின் குடியிருப்புக்கள் இஸ்ரேலியப் படையினரால் தகர்க்கப்படுவதற்கு சர்வதேச நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

## பலஸ்தீன மக்களின் மனுத்தாக்கல் இஸ்ரேல் நீதிமன்றால் நிராகரிப்பு

பலஸ்தீனர்களின் குடியிருப்புக்கள் இஸ்ரேலியப் படைப் பிரிவினரால் காஸாப் பகுதியில் தொடர்ந்து அழிக்கப்படுவதை நிறுத்துமாறு பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

இஸ்ரேலிய இராணுவம் அழித்துவரும் குடியிருப்புக்களை தற்காலிகமாக நிறுத்துமாறு இஸ்ரேலிய நீதிமன்றம் ஒன்று தற்காலிக தடை விதித்திருந்தது. இந்தத் தடையையே உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இந்தக் குடியிருப்பின் கட்டடத் தொகுதிகளில் இருந்து பலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதனிடையே யசீர் அரபாத்தின் ஆதரவாளர்கள் தங்கியிருக்கும் கட்டடத் தொகுதி மற்றும் பத்திரிகை நிறுவனத்துக்கு சொந்தமான கட்டடம் ஆகியவற்றின் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் நடத்திய தாக்குதலில் கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்திருந்ததுடன் கட்டடத்துக்கு வெளியே இருந்த பலர் படுகாயங்களுக்குமுள்ளாகினர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கந்தப்பொல வன்முறை குறித்து; நாடாளுமன்றில் நாளை விவாதம்!

கந்தப்பொலவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து நாளை 3 மணி நேரம் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் ஒன்றை நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற கட்சி தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சபாநாயகர் லொக்குபண்டார தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கந்தப்பொலவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடத்தப்பட வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் முன்வைத்த பிரேரணை கட்சித் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நாளை நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் காலை 10 மணி முதல் ஒரு மணி வரை நடாத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கூட்டத்தில் அடுத்த நாடாளுமன்ற அமர்வு ஜூன் மாதம் 8,9 ஆம் திகதிகளில் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன, ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான், அநுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சந்திரசேகரன், டி.யு.குணசேகர, விமல் வீரவன்ச ஆகியோர் கலந்துகொண்டனர். (01)

## வணிக நிலையங்களில்

# விலைப்பட்டியல் வைக்கவேண்டிய பொருட்களின் விபரம் அறிவிப்பு!

வணிக நிலையங்கள், நுகர்வோரின் பார்வைக்காக விலைப்பட்டியல் வைக்க வேண்டிய பொருட்களின் பட்டியலை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை - விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர், கா. செழியன் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் - பார்வைக்கு வைக்கப்பட வேண்டிய பொருட்களின் பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பட்டியலில் -

உணவு வகைகளும், பருகை வகைகளும், உணவை ஆக்குவதற்கான உள்ளீடுகள், மருந்து வகைகள், தூய்மைபேண் பொருட்கள், தாள்கள், அச்சிட்டதாள்கள், புத்தகங்கள், கால்நடை உணவுகள், கால்நடை மருந்துகள், எரிபொருளும் உராய்வு நீக்கியும், தீப்பெட்டி, மெழுகு திரி, கற்பூரம், பத்தி, சாம்பிராணி, தசாங்கம், பற்றரி (ரோச்), பயர், ரியூப், சீமெந்து, ஓடு, கூரைத் தகடு, வேளாண் தொழில்சார் பொறிகள், கருவிகள், உள்ளீடுகள், கடற்தொழிற் கருவிகள் (வலை, மிதப்பி, தங்கூசி, ஏனையவை), வெளியிணைப்புப் பொறிகள், வெளியிணைப்புப் பொறி உதிரிகள், கல்வனைஸ் வாளி, மாணவர் பயன்பாட்டுப் பொருட்கள், ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - தீர்வை விலக்களிக்கப்பட்டனவும், விலை பொறிக்கப்பட்டனவுமான பொருட்கள் சிலவற்றை பொறிக்கப்பட்ட விலையிலும் கூடுதலான விலையில் வாணிபர் சிலர் விற்பனை செய்வதை கவனித்துள்ளதாகவும் கீழ்க் குறிப்பிடும் பொருட்களை பொறிக்கப்பட்ட விலையிலும்கூடிய விலையில் விற்க வேண்டாம் என வாணிபர்களை நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி கேட்டுள்ளது.

மக்கள் நலன்விரும்பிகளும், நுகர்வோரும், விழிப்பாக இருந்து விலைக்களைக் கட்டுப்படுத்து வதற்கு உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் பொறிக்கூப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட வேண்டிய பொருட்களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளன. இதில் -

குழந்தைகளுக்கான பால்மா, உணவுவகைகள், மருந்துப் பொருட்கள், வேளாண் உள்ளீடுகள், கால்நடை மருந்து வகைகள், கனியுப்புக் கலந்த நீர், மாணவர் பயிற்சிப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், படங்கள், மாணவர் பயிற்சிக் கொப்பிகள் (சீ.ஆர்.கொப்பி தவிர்ந்தவை), செய்தித்தாள்கள், அயடீன் கலந்த உப்பு ஆகியன அடங்குகின்றன.

# படப்பிடிப்பாளர் தாக்கப்பட்டமைக்கு ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்!

தினக்குரல் பத்திரிகையின் படப்பிடிப்பாளர் சி.சிவபாலன் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்தை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பத்திரிகையாளர் சங்கம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த சனிக்கிழமை இரவு யாழ் நாயன்மார்கட்டு குளத்தடியில் வைத்து இனந்தெரியாதவர்களால் தினக்குரல் படப்பிடிப்பாளர் சிவபாலன் கண்கள் துணியால் கட்டப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு பற்றை ஒன்றுக்குள் தூக்கி வீசப்பட்டபின் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த சம்பவம் குடாநாட்டு பத்திரிகையாளர்களிடையே அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ஊடகவியலாளர்கள் சுயாதனமாகச் செயறபடுவதற்கு சாவு மணி அடித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.க வேட்பாளர் யார்?

## இன்று காலை முடிவுதெரியும்

பிரதி சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசிய முன்னணி யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இறுதி நேரத்தில் முடிவுசெய்யவுள்ளதாக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பாக கூடி ஆராய்ந்தனர். இதன்போது - யாரை வேட்பாளராக நிறுத்துவது என கலந்துரையாடப்பட்டது. எனினும், வேட்பாளர்களின் பெயர் இன்று காலை வெளியிடப்படும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவும் பிரதி சபாநாயகர் தெரிவில் யாருக்கு ஆதரவு வழங்குவது என இறுதிநேரத்தில் அறிவிக்கவுள்ளதாக தெரிவித்தது(01)

## நாடாளுமன்றில் பெரும்பான்மையை...

ஆகியோர் கடந்த சனிக்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் உயர் பீடத்தைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

கொழும்பு விஜேராம வீதியில் அமைந்துள்ள விவேக ராமய விகாரைக்கு திடீரென விஜயம் செய்த இவர்கள் ஜாதிக ஹெல உறுமயவின் சுப்ரீம் சங்க சபையை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது - நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள பிரதி சபாநாயகர் தெரிவு மற்றும், குழுக்களின் பிரதித் தலைவர் பதவிகளுக்கான வாக்கெடுப்புக்களில் ஜாதிக ஹெல உறுமயவை, ஆளும் கட்சிக்கு ஆதரவு தரும்படி ஜனாதிபதி சந்திரிகா கோரியதாகத் தெரியவருகிறது.

ஜாதிக ஹெல உறுமய தமது ஆதரவை தரும் பட்சத்தில், பௌதத மதத்தின் நன்மைக்காக- பிரதிபலனாக அரசாங்கம் எதையெதைச் செய்யும் என்ற இரகசியப் பட்டியல் ஒன்றையும் ஜனாதிபதி சந்திரிகா பௌத்த சங்க சபாவில் வைத்து விவாதத்துக்கு சமர்ப்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு...

விடுதலைப் புலிகளுக்கும் மீள ஆரம்பித்தல் மற்றும் புனரமைப்பு, அபிவிருத்திகளுக்கான நிதியுதவிகள் குறித்து பேச்சுக்களை நடத்திவரும் யசூஷி அகாஷி -

இன்று கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனை சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்று காலை இடம்பெறும் எனத் தெரியவருகிறது. விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி வந்தடையும் யசூஷி அகாஷி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு உடனடியாகவே கொழும்பு திரும்பவுள்ளார்.

தனது கிளிநொச்சி விஜயத்தின் போது - தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து - அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்படவுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் -

உதவிவழங்கும் மாநாட்டின் மூலம் திரட்டப்பட்ட நிதியை விரைவில் பயன்படுத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்குவது குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தி, ஒரு தீர்மானத்தை எட்டுவதற்கு அகாஷி விருப்பம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து புலிகளின் சமாதான செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளபோதும் - இந்தச் சந்திப்பில் தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் பங்குபற்றுவாரா என்பது குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை, இன்றுகாலை கிளிநொச்சியில் புலிகளுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் யசூஷி அகாஷி -

உடனடியாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து பேச்சு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இன்னும்...

ன்களுக்கு இடமளிக்கப்படவேணடும் என கோரிக்கைவிடுத்தார்.

இதற்கு பதிலளித்தபோதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை ஒருவாரத்துக்குள் நிரூபிக்கப்போவதாக குறிப்பிட்டார். (01)

## பழுதடைந்த...

பழுதடைந்ததால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்னர்.

124 விமானப்படையினரும், இரண்டு அதிகாரிகளும், விமானப் படையில் பணியாற்றும், 5 சிவில் உத்தியோகத்தர்களுமே சுகவீனமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ சிகிச்சைகளின் பின்னர் இவர்களின் உடல்நிலை தேறிவருவதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக விமானப்படை உயரதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

## புனர்வாழ்வு...

கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் - அதன் பணிப்பாளர் றெஜி கலந்து கொண்டார்.

இத்துடன், விடுதலைப் புலிகளின் அரச, அரச சார்பற்ற இணைப்பாளர் தியாகராசா, மட்டு-அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரச சார்பற்ற இணைப்பாளர் யோகா இருவரும் கலந்துகொண்டனர்.

யுனிசெப் அமைப்பின் சார்பில் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றெற் சைவான் கலந்துகொண்டார்.

நேற்றுக்காலை பத்து மணி தொடக்கம் நணபகல் 12 மணி வரை நடந்த இந்தக் கலந்துரையாடலில் புனர்வாழ்வு நிலையங்களை மிக விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இங்கு உரையாற்றிய கேணல் ரமேஷ் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், யுனிசெப்பும் இணைந்து இந்தப் புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமெனவும், இவ்வாறு இதனை ஆரம்பிக்காதுவிட்டால் விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் மீளவும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## புலிகளின் சமாதான...

முயற்சிகள் தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டறிந்தார். அத்துடன், விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் பின்னணியிலான மனித உரிமை நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசாரித்து அறிந்துகொண்டார்.

இதன்போதே - அரசியற்துறைப் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் நிறுவன மயப்படுத்தப்பட்ட மனித உரிமை குழுவை நியமிக்கவுள்ளனர் எனவும், இது சமாதான செயலகத்தில் இயங்குமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறு உருவாக்கப்பட்ட மனித உரிமைக் குழு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் ஒரு அங்கமாக இயங்கும் எனவும் குறிப்பிட்டார்.

இயன்மாட்டீன் ஏற்கனவே விடுதலைப் புலிகளின் காவல்துறை மற்றும் நீதித்துறைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இயங்கவுள்ள மனித உரிமைக் குழுவிற்கு தனது முழு ஆதரவினை வழங்குவதாகவும் மாட்டீன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் போராளிகள் மற்றும் சமூக நிறுவனப் பிரதிநிதிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பாகப் பயிற்சி அளிப்பது தொடர்பான விடயங்களும் நீண்டநேரமாகக் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை - இயன்மாட்டீன் இன்று கொழும்பிலுள்ள அரச அலுவலகர்களைச் சந்திக்கவுள்ளார். இதில், தற்போது - சமாதானச் செயலகத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜெயந்த தனபாலவையும் சந்திக்கவுள்ளார்.

இவருடனான தனது சந்திப்பின் போது - என்ன விடயத்தினை அவருக்குத் தெரிவிக்கலாமென மாட்டீன் தமிழ்ச்செல்வனிடம் கேட்டார். இதற்குத் தமிழ்ச்செல்வன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் அமுல்படுத்துமாறும், இவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - சிறைகளில் நீண்டகாலமாக எவ்வித விசாரணைகளும் இன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் விவகாரம் தொடர்பாக தான் கவனம் செலுத்தவுள்ளதாகவும், இவர்களின் விபரங்களை தமிழ் சட்டத்தரணிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் மாட்டீன் தெரிவித்தார்.

அத்துடன் , உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர அனுமதிக்காமை மனித உரிமை மீறல் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதியில் - மனித உரிமைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைக்கவுள்ள குழு தொடர்பாகவும மாட்டீன் நன்றி தெரிவித்தார்.

## கூட்டமைப்பு...

இந்தக் கூட்டத்தில் பிரதி சபாநாயகர் தெரிவில் எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இன்று காலை கூடி முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாக இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர், தங்கேஸ்வரி, கனகசபை, தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பதிப்புலக வேந்தர்களே!
நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்
நிலா பதிப்பகம்
சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும்(COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.

PCC COLOUR DIGTAL PRINTER
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.